விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் பூசை 05

நெருக்கடியான நிலையில் மாணவர்கள் சாதனை 07

இந்தியாவும் தென்னாசி யாவுக்கான வெளியுறவுக் கொள்கையும் 08

தேசிய மீன் உற்பத்தியில் மட்டு. மாவட்டம் சாதனை 13



# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 034 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 15, திங்கள் 30.12.2013

பக்கம் : 16

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24 C

# மன்னார் புதைகுழி தோண்டும் பணி மீண்டும் இடைநிறுத்தம்

மன்னார், டிசெ. 30

மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில் தொடர்ச்சியாக மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வரும் நிலையில், அதனைத் தோண்டும் பணிகள் நேற்று இரண்டாவது தடவையாகவும் திடீரென நிறுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் மூன்றாம் ஆம் திகதி வரையில் புதை குழியைத் தோண்டும் பணி இடம் பெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி குறித்த மனிதப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டது. அன்று முதல் மன்னார் நீதிவான் மற்றும் மன்னார் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரின் முன்னிலையில் குறித்த இடத்தைத் தோண்டும் பணிகள் கடந்த 22 ஆம் திகதி வரை நடைபெற்றன.

அங்கு 11 மனிதச் சடலங்களின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து கொழும்பிலிருந்து விசேட நிபுணர் குழுவினர் வருகை தந்து, அவர்கள் முன்னிலையில் குறித்த மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்காக டிசெம்பர் 28ஆம் திகதி வரை அகழும் பணிஇடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் கொழும்பிலிருந்து வந்த விசேடநிபுணர் குழுவினர் முன்னிலையில் மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணிகள் நேற்று முன்தினம் மீண்


15 ஆம் பக்கம் பார்க்க


# மன்னார் புதைகுழியை ஆராய சர்வதேச நிபுணர் குழு அவசியம்

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 30

"மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாபெரும் மனிதப் புதைகுழியைத் தோண்டி அதை ஆய்வுசெய்வதற்கு சர்வதேச நிபுணர் குழுவை இலங்கை அரசு உடன் அழைக்க வேண்டும். அப்போது தான் உண்மை கண்டறியப்படும். உள்நாட்டு நிபுணர் குழுவில் எமக்கு நம்பிக்கை இல்லை."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள் ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் மன்னார் புதைகுழியின் உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையெனில், இலங்கை அரசுக்குத்தான் அது ஆபத்தாக அமையும் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

> “மன்னார் ஆயரின் வேண்டு கோளுக்கிணங்க இது தொடர்பில் சர்வதேச விசாரணை உடன் தேவை. ஏனெனில், இந்த மனிதப் புதைகுழி இனப்படு கொலைக்கு ஒரு சான்றாக இருக்கின்றது.

கடந்த 20ஆம் திகதி மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியிலிருந்து தொடர்ச்சியாக பல மனிதச் சடலங்களின் எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், பொன்.செல்வராஜா, பா.அரியநேத்திரன் ஆகியோர் நேற்றுக் கருத்துக்களை வெளியிட்டனர்.

இது குறித்து அவர்கள் தெரி


15 ஆம் பக்கம் பார்க்க


## இராணுவத்தில் இணைந்த பெண்ணின் வீடு எரிப்பு

வவுனியா, டிசெ. 30

இராணுவத்தில் இணைந்த தமிழ்பெண்ணொருவரின் வீடு வவுனியா சுந்தரபுரம் பகுதியில் எரியூட்டப்பட்டுள்ளது.


15ஆம் பக்கம் பார்க்க


## உண்ணிக்காய்ச்சல் தீவிரம் பொதுமக்கள் அவதானம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ். மாவட்டத்தில் உண்ணிக் காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் இவ்வாறு 30 இற்கும் அதிகமானோர் உண்ணிக் காய்ச்சல் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர் தொடக்கம் முதியவர்


15 ஆம் பக்கம் பார்க்க


## நவிப்பிள்ளையின் அறிக்கை மார்ச் 26இல் ஜெனிவாவில்

கொழும்பு, டிசெ. 30

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் மார்ச் மாதம் 26 ஆம் திகதி இலங்கை தொடர்பான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கவுள்ளார். ஐ.நா மனித உரிமைகள் சபையின் நிகழ்ச்சி அட்டவணையிலும் இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது அமர்வு எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதன்போதே, மார்ச் 26 ஆம் திகதி இலங்கை தொடர்பான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ளார். இதையடுத்து, இலங்கை தொடர்பான விவாதம் நடத்தப்படும் என்றும், தன்சார்பிலான கருத்துகளை இலங்கை அரசு முன்வைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டத்தொடரின் இறுதி நாளான மார்ச் 28 ஆம் திகதி தீர்மானம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டதை அடுத்து, செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் அளித்த வாய்மொழி அறிக்கையில், இலங்கையில் எந்த முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை என்றும், எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் தீர்க்க


15 ஆம் பக்கம் பார்க்க




எழுவைதீவு கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. பிடிபட்ட இந்திய மீனவர்களில் ஒருவர் ஏற்கனவே இதே குற்றத்துக்காக 45 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையானர் என்று கடற்றொழில் நீரியல்வள திணைக் களத்தினர் தெரிவித்துள்ளனர். (ங-4-17-400)

## ஈழ அகதி தமிழகத்தில் நேற்றுக் கைது

கொழும்பு, டிசெ. 30

தமிழகம், இராமேஸ்வரம் பகுதியில் வெளிநாட்டு பணத்துடன் இலங்கை அகதி ஒருவரை பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் பொலிஸார் நேற்று அதிகாலையில் ரயில் நிலையப் பகுதியில் ரோந்து


15 ஆம் பக்கம் பார்க்க


## கடத்தப்பட்டதாக நாடகமாடிய இளைஞர் பொலிஸில் சரண்

யாழ்ப்பாணம், டிசெ. 30

பருத்தித்துறையில் கடந்த வியாழக்கிழமை கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட இளைஞர் முல்லைத்தீவில் நண்பரின் வீட்டில் மறைந்திருந்துவிட்டு நேற்றுமுன்தினம் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.


இது குறித்து தெரியவருவதாவது:-

வடமராட்சி வடக்கு இன்பருட்டியைச் சேர்ந்த சூரியகுமாரன்





15ஆம் பக்கம் பார்க்க

# உதயனின் ஆண்டு நிறைவு ஒன்றுகூடலின்போது...













உதயன் பத்திரிகையின் 28 ஆவது ஆண்டு நிறைவு ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று நீராவியடி இலங்கை வேந்தர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது உயிர் தியாகம் செய்த பணியாளர்களுக்கு பிரதம ஆசிரியர் வ.ம.கானமயில்நாதன் அஞ்சலி செலுத்துவதையும், உதயன் நிர்வாக இயக்குநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் பாரியாருடன் தனது அறுபதாவது அகவையை கேக் வெட்டிக் கொண்டாடுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும், உதயன் பத்திரிகையின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்வி ச.லக்ஷ்மி பணியாளர்களது பிள்ளைகளுக்கு பரிசில் வழங்குவதையும் கவிதையால் பார்ப்போரைக் கவர்ந்த சிறுமியையும், நலத்திட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

(ஜ-20)

## வடமாகாணத்தில் 1101 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடமாகாணத்தில் இந்த வருடம் ஆயிரத்து 101 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். அதிகளவாக யாழ். மாவட்டத்திலேயே 755 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த வருடம் கடந்த வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதியில் வடக்கில் ஆயிரத்து 101 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 755 பேரும், முல்லைத்தீவுமாவட்டத்தில் 122 பேரும் வவுனியா மாவட்டத்தில் 90 பேரும், மன்னார் மாவட்டத்தில் 69 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 65 பேரும் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ். மாவட்டத்தில் அனைத்து மாதங்களிலும் டெங்கினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது. ஜனவரி - 90, பெப்ரவரி - 77, மார்ச் - 84, ஏப்பிரல் - 115, மே - 70, ஜூன் - 30, ஜூலை - 23, ஓகஸ்ட் 43, செப்டெம்பர் - 35, ஒக்ரோபர் - 48, நவம்பர் - 52, டிசெம்பர் - 78 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் ஜூலை மாதத்தில் 10 பேரும் ஏனைய மாதங்களில் 10 இற்கும் குறைவானோரும், மன்னாரில் ஜனவரியில் - 23 பேரும் ஏனைய மாதங்களில் 10 இற்கும் குறைவானோரும், வவுனியாவில் ஜனவரியில் 11 பேரும், மார்ச்சில் - 12 பேரும், டிசெம்பரில் 14 பேரும் ஏனைய மாதங்களில் 10 இற்கும் குறைவானோரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனவரியில் 12 பேரும், மார்ச்சில் - 17 பேரும், ஏப்ரலில் - 18 பேரும், மே இல் 20 பேரும், ஜூலையில் 12 பேரும் ஏனைய மாதங்களில் 10 இற்கும் குறைவானோரும் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

தவிர நாடளாவிய ரீதியில் 31 ஆயிரத்து 7 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். ஜனவரியில் 3 ஆயிரத்து 462 பேரும், பெப்ரவரி - 3 ஆயிரத்து 256, மார்ச் - 2 ஆயிரத்து 995, ஏப்ரல் - 2 ஆயிரத்து 109, மே - 2 ஆயிரத்து 614, ஜூன் 2 ஆயிரத்து 427, ஜூலை - 2 ஆயிரத்து 924, ஓகஸ்ட் - 3 ஆயிரத்து - 282, செப்ரம்பர் - ஆயிரத்து 912, ஒக்ரோபர் - ஆயிரத்து 626, நவம்பர் - 2 ஆயிரத்து 554, டிசெம்பர் - ஆயிரத்து 846 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சனத்தொகை அதிகமுள்ள கொழும்பு மாநகர எல்லையில் 3 ஆயிரத்து 384 பேரும், மாநகருக்குப் வெளியே உள்ள இடங்களில் 6 ஆயிரத்து 975 பேரும், டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர் - என்று புள்ளி விபரத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

## ஐவர் கைது

சுமார் 7 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பனை மரங்கள் சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்டு பிளக்கப்பட்ட நிலையில் பளை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. மரங்களுடன் கைது செய்யப்பட்ட 5 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இயக்கச்சி, பனிக்கையடி பகுதியில் உள்ள பனை மரங்களே இவ்வாறு சட்ட விரோதமாக நேற்றுமுன்தினம் தறிக்கப்பட்டுள்ளன. பின்னர் அவை பிளக்கப்பட்ட நிலையில் இருந்தபோது பொலிஸாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்து. சம்பவ இடத்துக்கு பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் அவற்றைக் கைப்பறினர் அங்கு சட்ட விரோதமாக பனை தறித்த 5 பேரையும் கைது செய்ததோடு மரங்களை யும் பொலிஸார் கைப்பற்றினர் -என்று பொலிஸார் தெரிவித்தனர். (ங-4)

## காணாமற்போன சிப்பாய் நீரோடையில் சடலமாக மீட்பு

கொழும்பு, டிசெ. 30

கடந்த நத்தார் தினத்தின் (25 ஆம் திகதி) இரவிலிருந்து காணாமற் போயிருந்த 29 வயதான இராணுவச் சிப்பாயின் சடலம் அவரது வீட்டிலிருந்து சுமார் அரைக் கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நீரோடையின் சகதிக்குள் சிக்கியிருந்த நிலையில் அடுத்த நாள் (26 ஆம் திகதி) மீட்கப் பட்டுள்ளது.

அரநாயக்க பொலிஸ் வலயத்துக்குட்பட்ட மோரகம்மன பிரதேசத்தைச் சேர்ந்தவரும் அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் பணிபுரிந்தவருமான தமித் அநுரத்த (வயது - 29) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.


தொடர்ந்து 12 வருடங்களாக இராணுவ சேவையில் இருந்த இவர் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்காக விண்ணப்பித்துவிட்டு விடுமுறையில் நத்தார் வைபவத்தைக் கழிக்க வீட்டுக்கு வந்திருக்கிறார். அன்றைய தினம் இரவு 7 மணியளவில் கடைவீதிக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றவர் அதி காலைவரை வீடு திரும்பாததால் கலவரமடைந்த குடும்பத்தினர் அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டபோது நீரோடைக்கரையில் சகதிக்குள் பாதி புதைந்திருந்த நிலையில் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

மரணமானவர் இரண்டரை வருட, பத்துமாத இரு குழந்தைகளின் தந்தை யெனத் தெரியவருகின்றது. இவரது மரணம் குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாக அவரது குடும்பத்தினர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அரநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## கள்ளுத் தவறணை 'சண்டியர்'களால் மக்கள் சிரமம்

தென்மராட்சி, டிசெ.30
மிருசுவில் வடக்கில் உள்ள கள்ளுத்தவறணைக்குகள் அருந்த வருவோரின் நடவடிக்கைகள் குறித்து அயலில் உள்ள மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.
தவறணைக்கு வெளியே மது போதையில் நிற்போர் அந்த வழியே வரும் பெண்கள், யுவதிகள், பாடசாலை மாணவிகள் போன்றோரை தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும், அதனைத் தட்டிக் கேட்கச் செல்லும் ஆண்கள் அச்சுறுத்தப்படுவதாகவும்தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை தவறணைக்கு முன்பாக சந்தை இயங்குவதால் பொருள்கள் வாங்கச் செல்வோரையும், மதுப்பிரியர்கள் தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
தவறணைக்கு வருவோரால் அதற்கு அருகில் வசிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதால் அதனைக் கட்டுப்படுத்தக் கோரி உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)



யாழ்.பிரதேச செயலகத்துக்கென புதிதாக யாழ்.பழைய பூங்கா வளாகத்தினுள் அமைக்கப்பட்டு வரும் கட்டடப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (வ-135)

## வெங்காயச் செய்கையால் விவசாயிகள் பாதிப்பு

வலி.தென்மேற்கு, டிசெ.30
விதை வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டாலும் விலை உயர்வாலும் பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
வெங்காயச் செய்கைக்குப் பயன்படுத்தப்படும் மேட்டு நிலங்களும் வயல் நிலங்களும் வெறுமனே காட்சியளிக்கின்றன.
கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட வெங்காயச் செய்கையின் போது பிடி பிடியாகக் கட்டி பாதுகாப்பாக வைக்கப்பட்ட விதை வெங்காயம் அழுகிப் பழுதடைந்துள்ளதாலேயே விதை வெங்காயத்துக்கு தட்டுப்பாடும் விலையுயர்வும் ஏற்பட்டுள்ளன.
விதை வெங்காயத்தின் விலை அந்தர் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபா வரை விலை அதிகரித்துள்ளதால் அநேகமான விவசாயிகள் வெங்காயச் செய்கையைக் கைவிட்டுள்ளனர். (வ-115)

## நுளம்புகளைக் கட்டுப்படுத்த பாடசாலைகள் ஒத்துழைக்குக

*அதிபர்களைக் கோருகிறார் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி*

வலி.தென்மேற்கு, டிசெ.30
மாணவர்களின் நலன்கருதி அரசால் இந்த மாதம் 26 ஆம் திகதியிலிருந்து ஒரு வார காலத்துக்குப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாடசாலை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சகல பாடசாலைகளிலும் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை நடைமுறைப் படுத்திவரும் சுகாதார வைத்திய அதிகாரி, இந்தச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளார்.
அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால் பாடசாலைகளில் தேங்கி நிற்கும் தண்ணீரில் உற்பத்தியாகும் நுளம்புகளால் விடுமுறை கழித்துப் பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று கருதியே அரசு பாடசாலை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை பிரகடனப்படுத்தியுள்ளது.
இதற்கமைய, சண்டிலிப்பாய் சுகாதாரப் பரிசோதகர்கள், தொண்டர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொலிஸாருடன் இணைந்து பாடசாலைகளுக்குச்சென்று நுளம்பு உற்பத்தியாகக் கூடிய சூழல் குறித்துக் கண்காணித்து வருவதுடன் தடயப் பொருள்களை அழிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஒத்துழைக்குமாறு பாடசாலை அதிபர்களை சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கோரியுள்ளார். (வ-115)

## மாநகர சபை உறுப்பினர்களுக்கும் முதன்மையான மருத்துவ சேவை

*யாழ்.பல்கலை மருத்துவபீடாதிபதி பாலகுமாரன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.30
முக்கியஸ்தர்களுக்கு முதன்மை அடிப்படையில் அளிக்கப்படும் மருத்துவ சேவை மாநகர சபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் என்று யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி எஸ்.பாலகுமாரன் தெரிவித்தார்.
யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கென புதிய ஆறு மாடிக் கட்டடம் அமைக்க யாழ். மாநகரசபை தனது காணியை வழங்க ஒப்புக் கொண்டதை அடுத்து யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் விடுத்த கோரிக்கையைச் செயற்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார்.
மாநகரசபை தனது காணியை மருத்துவ பீடத்துக்கு வழங்கும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றியுள்ளது. எனவே மாநகர சபை உறுப்பினர்களுக்கு முக்கியஸ்தர்களுக்கு வழங்குவது போன்ற மருத்துவ சேவையை வழங்க முன்வர வேண்டும் என்று மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.
அதைத் தொடர்ந்து யாழ்.மாநகரசபை உறுப்பினர்களுக்கு முக்கியஸ்தர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவையை வழங்க ஏற்பாடுகள் செய்வதாகவும் மருத்துவ பீடாதிபதி தெரிவித்தார்.
இதற்கென மாநகரசபை உறுப்பினர்களுக்கான அறிமுக அட்டைகள்வழங்கப்படவுள்ளனஎன்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

"–"
**மாநகரசபை தனது காணியை மருத்துவ பீடத்துக்கு வழங்கும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றியுள்ளது.**

## துப்பாக்கி ரவைகள் சாவகச்சேரியில் மீட்பு

தென்மராட்சி, டிசெ.30
இரவுவேளையில் வாள் மற்றும் கொட்டன்களுடன் வளவுக்குள் அத்துமீறி சென்றவர்களைத் துரத்திச் சென்ற பொலிஸார் அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் துப்பாக்கித் தோட்டாவை மீட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கடந்த வியாழக்கிழமை இரவு வாள் மற்றும் கொட்டன்களுடன் சாவகச்சேரி ஆடியம்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்த நால்வரை அயலவர்கள் துரத்தியுள்ளனர்.
மக்கள் சென்ற பின்னர் அந்த நால்வரும் சந்தியில் உள்ள கடை நடத்துபவரை பயமுறுத்தியுள்ளனர்.
இந்த வேளை யில் பொலிஸார் அங்கு வரவே நால்வரும் தப்பியோடியுள்ளனர்.
குறித்த நால்வரில் ஒருவர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்பதால் அங்கு சென்று விசாரித்தபோதே பொலிஸார் அங்கிருந்து குறித்த துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர்.
மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட வேளை அவர்களில் இருவர் வாகனத்தில் தப்பியோட முற்பட்ட வேளையில் நுணாவிலில் உள்ள சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்து கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. துப்பாக்கித் ரவைகள் மீட்கப்பட்டதால்மேலதிகவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (வ)

"–"
**வீடொன்றில் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்த நால்வரை அய லவர்கள் துரத்தியுள்ளனர்.**

## சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வு

தென்மராட்சி, டிசெ.30
சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.
நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொ.ஜக்ஸீல், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், இலங்கை மின்சார சபை சாவகச்சேரி அலுவலக மின் அத்தியட்சகர் அன்ரன் ஞானப்பிரகாசம் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் எஸ்.வசந்தகுமார் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டார்.
சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளையொட்டி சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெற்றது. மலரை நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை வெளியிட முதன்மை விருந்தினர் சீ.வீ.கே.சிவஞானம் பெற்றுக் கொண்டார். (ந)



## கல் அகழ்வுக்கு மக்கள் எதிர்ப்பு

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கல் அகழ்வை நிறுத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இங்கு அதிக ஆழத்தில் கல் அகழும் வேலைகள் இடம்பெறுவதால் வெடியதிர்வுகள் உணரப்படுகின்றன. இதனால் கல் அகழ்வு இடம் பெறும் பகுதியில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும்இந்தப் பகுதியில் உள்ள மலைகளை உடைத்து கல் எடுக்கப் படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதனால் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது. எனவே கல் அகழ்வைத் தடை செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாவட்ட நிலை - 1
தேசிய நிலை - 16
க.பொ.த. உயர்தரப்பரீட்சை பழைய பாடத்திட்டத்தில் 2 A,B சித்தியைப் பெற்ற யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற மாணவியும் திரு. திருமதி தேவராசா ராதாதேவியின் செல்வப்புதல்வி யுமான
செல்வி தேவராசா தினுஷா
அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பெரியப்பா Dr. வை. பாலகிருஷ்ணன்
மம்மி, பா. சங்காவதி குடும்பத்தினர்

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி
veta Spoken English
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| Mon, Wed, Fri : 9.30am | Tue,Thu 11.00 a.m. | Mon,Fri :8.00 a.m. | Sat, Sun 8.00 a.m. |
| Mon, Wed, Fri : 11.30am | Sat, Sun 2.30 p.m. | Sat, Sun 9.30 a.m. | Tue,Thu 8.30 a.m. |

O/L பரீட்சை எழுதிய, மாணவர்களுக்கு விசேட பிரிவுகள் (Duration: 3 Months)
பல்கலைக்கழகம் செல்லவுள்ளோருக்கான விசேட பிரிவுகள்
DMI COMPUTER EDUCATION
UK ஆங்கில பரீட்சைகள் A1-Exam B1-Exam City & Guilds Approved Centre
IELTS •Unique Test Tips •Latest course Materials

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| No.113. கஸ்தூரியார் வீதி, | M. M. V. வீதி, | கண்டி வீதி, (HNB அருகில்) | 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |


# மரண அறிவித்தல்

## செல்வன் சிவராஜன் அபிராஜ்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மன்னார் மணற்குளம் உயிலங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சிவராஜன் அபிராஜ் நேற்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவராஜன் - ராஜினி தம்பதியரின் அன்பு மகனும், தனுசியா, உமாசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ரெத்தினம், பரமேஸ்வரி, சின்னத்துரை மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.12.2013) திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 5, கலட்டி அம்மன் கோயில் வீதி, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சபாரத்தினம் சிவசங்கரன்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாக வும் கொண்ட சபாரத்தினம் சிவசங்கரன்ஐயா நேற்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் ஐயா - பரிபூரணம் அம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், பரமேஸ்வரி, கேதீஸ்வரநாதன், கமலாதேவி, நல்லைநாதன் ஆகி யோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2013) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சிவஞானப்பிள்ளையார் கோயிலடி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## அழிவடையும் நிலையில் கிளிநொச்சி நெற்பயிர்கள்

### மழை பெய்யாததால் இந்த அவலம்

கிளிநொச்சி,டிசெ.30

பருவமழை பெய்யாததால் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நெற்பயிர்கள் அழிவடையும் நிலையில் காணப்படுவதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

காலபோக நெற்செய்கை மழை நீரை நம்பியே செய்கை பண்ணப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் இம்முறை அதிக அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. வயல் நிலங்களில் நெற்பயிர்கள் வளர்ந்துள்ள போதிலும் நீர் இல்லாததால் அவை வாடிய நிலையில் காணப்படுகின்றன. தொடர்ந்தும் மழை பெய்யாது விட்டால் நெற்பயிர்கள் முழுமையாக அழிவடைந்து தமக்கு பெரிய நட்டம் ஏற்படுமென விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன், உமையாள்புரம், முரசுமோட்டை ,கண்டாவளை, புளியம்பொக்கணை, வட்டக்கச்சி, தருமபுரம், இராமநாதபுரம், உருத்திரபுரம், புதுமுறிப்பு, அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள வயல்நிலங்களே நீர் இல்லாமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்தப் பகுதி விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களிலும் பெரு மழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் பயிர்கள் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க-426)

## அரசியல் பழிவாங்கலால் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்

### நிரந்தர நியமனம் கிடைக்காத தொண்டராசிரியர்கள் குமுறல்

முல்லைத்தீவு, டிசெ.30

உரிய தகுதிகள் யாவும் இருந்தும் தாம் நிரந்தர நியமனம் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளதாக நிரந்தர நியமனம் கிடைக்காத முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பொருட்டு நடைபெற்ற நேர்முகத் தேர்வின் போது தகுதி அடிப்படையில் தாம் தெரிவு செய்யப்பட்ட போதிலும், அரசியல் பழிவாங்கல் காரணமாகத் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லையெனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்படாத சிலர் 12 வருடங்களுக்கும் மேலாகத் தொண்டராசிரியர்களாக வேதனம் எதுவும் பெறாது கடமையாற்றியுள்ளனர். நேர்முகத் தேர்வின்போது இவர்களிலும் பார்க்கக் குறைந்த நிலையில் இருந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதனால் தாம் நியாயமற்ற வகையில் புறக்கணிக்கப்பட்டதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் சிலர் தமது பரிதாப நிலை தொடர்பாக புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட வடமாகாண சபையின் கல்வியமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் தமக்கு ஏனையவர்களைப் போன்று நிரந்தர நியமனம் வழங்கித் தமது வாழ்வில் ஒளியேற்றுமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)


### விற்பனைக்கு

மகேந்திரா ரக்டர் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 2102380

### வீடு விற்பனைக்கு

கேணியடிலேன் கொக்குவில் மேற்கில் மேல்மாடியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு
தொடர்புக்கு-
0041522030235, 0770594789

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
ads1@uthayan.com
0215671111


# மரண அறிவித்தல்

## வேலாயுதம் பாலசுப்பிரமணியம்



வியாபாரிமூலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், புலோலி மத்தி கந்தஉடையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் பால சுப்பிர மணியம் நேற்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த புதல்வனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் அபிராமி (வலி கிழக்கு பிரதேசசபை), மாதங்கி (யாழ். மருத்துவபீடம்) ஆகியோரின் தந்தையும் செந்தூர்குமாரின் (துறைமுக அதிகாரசபை K.K.S.) மாமனாரும் மாதுரியாவின் பேரனும் பாலகிருஷ்ணன், பாலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி கில்மன் (சதானந்தன்) மரியகிறிஸ்ரின்



விடத்தல்தீவை பிறப்பிடமாகவும் குருமட வீதி, சாவற்காடு மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கில்மன் மரிய கிருஸ்ரின் நேற்று முன்தினம் (28.12.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை மன்னாரில் நடைபெற்று பூதவுடல் மன்னாரில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருமட வீதி, சாவற்காடு, மன்னார்.
தகவல்:
லக்ஸ்மன் குடும்பத்தினர். (லக்கு)

# மரண அறிவித்தல்

## கட்டையன் தங்கவடிவேல் (கிட்டிணப்பிள்ளை)



கலைமகள் வீதி இமையாணன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட க. தங்கவடிவேல் நேற்று (29.12.2013) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும், யோகேஸ்வரன் (இத்தாலி), சுதேஸ்வரன் (ஜேர்மனி), ஜோதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் (லண்டன்), ரதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.12.2013) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலைமகள் வீதி, இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி
குடும்பத்தினர்.


## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

Happy New Year
வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்
புதுவருடத்தை முன்னிட்டு எங்கும் கிடைக்காத கட்டணச்சலுகை
- சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில்
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.
- கருவாடு, எண்ணெய் வகைகள், மற்றும் மருந்துப்பொருட்கள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.

15 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருண் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.1, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம் . Tel : 021 222 6113

இணை நிறுவனம்: அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் Tel : 021 222 3536
இல.10, கஸ்தூரியார் வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.

# 2 ஆயிரத்து 298 பயனாளிகளுக்கு செயற்கை அவயவங்கள்

*மெத்தா நிறுவனத்தின் 4 வருட சேவையில்*

யாழ்ப்பாணம், டிசெ.30
மன்னார் மெத்தா பவுண்டேசன் நிறுவனத்தால் கடந்த 4 வருடகால சேவையில் வடக்கு மற்றும்தெற்குமாகாணங்களைச் சேர்ந்த 2 ஆயி ரத்து 298 பயனாளிகளுக்கு செயற்கை அவயவங்கள்பொருத்தப்பட்டுள்ளன. இலங்கை சுகாதார அமைச்சின் அனுமதியுடன் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் செயற்பட்டு வரும் மன்னார் மெத்தா பவுண்டேசன் நிறுவனம், போர் மற்றும் இயற்கை இடர்கள் விபத்து மற்றும் பிறப்புப் போன்ற காரணங்களால் அங்கங்கள் பாதிப்படைந்தவர்களுக்கான செயற்கை அவயவங்களைப் பொருத்தும் நடவடிக்கையை கடந்த 4 வருடங்களாக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் கடந்த 4 வருட காலத்தில் இது வரை 2 ஆயிரத்து 298 பேர் பயனடைந்துள்ளனர்.
இவற்றில் போரினால் பாதிப்படைந்த 1,745 பேரும், விபத்தினால் பாதிக்கப்பட்ட 277 பேரும், பிறப்பினால் பாதிக்கப்பட்ட 75 பேரும், ஏனைய பாதிப்புக்களால் பாதிக்கப்பட்ட 108 பேரும் , நோயினால் பாதிக்கப்பட்ட 93 பேரும் என 2,298 பேர் பயனடைந்துள்ளனர். வடமாகாணத்தில் முல்லைத் தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், தென் மாகாணத்தில் புத்தளம், மாத்தறை, கண்டி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் பயனடைந்துள்ளனர். (ஓ-14)

# பஸ் மீது கல்வீச்சு

சந்தேகநபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, டிசெ.30
சாவகச்சேரி ஏ-9 வீதியில் சென்ற தனியார் பஸ்ஸின் மீது வெள்ளிக்கிழமை கல் வீச்சு இடம்பெற்றுள்ளது.
வவுனியா தனியார் பஸ் சங்கத்தின் பஸ்கள் கடந்த வெள்ளிக்கிழமை சேவையில் ஈடுபடாத வேளையில் முல்லைத் தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.
குறித்த நபரை சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தியபோது 14 தினங்கள் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப் பிக்கப்பட்டது. (வ-9)

# விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் பூசை


## 2014 ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாக

யாழ்ப்பாணம், டிசெ.30
2014 ஆம் ஆண்டை இனிதாக வரவேற்கும் முகமாக இராணுவத்தினரால் கையகப் படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள கிறிஸ் தவ ஆலயங்கள் உட்பட குடா நாட்டின் கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளும் கலை நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

"–"

**2014 ஆம் ஆண்டு பிறப்பதற்கு இன்னும் ஒரு நாளே உள்ள நிலையில் கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளும், கலை நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளன.**

நத்தார் பண்டிகைக் காலம் தற்போது கிறிஸ்தவ மக்களால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில் கடந்த வருடம் 2013 ஆம் ஆண்டு விடுவிக்கப்படாத உயர் பாதுகாப்புவலயங்களாக இருந்த பிரதேசங்களில் இருந்த கிறிஸ் தவ ஆலயங்களில் பூசை வழிபாடுகள் இடம்பெறவில்லை. எனினும் மூடியிருந்த பகுதிகளில் இருந்த கிறிஸ்தவ ஆலயங்களில் தற்காலிகமாக நடைபெற்ற புத்தாண்டை வரவேற்பதற்கான பூசை வழிபாடுகளில் மக்கள் பங்கேற்றிருந்தனர்.
இந்த நிலையில் தற்போது 2013 ஆம் ஆண்டில் இராணுவத்தால் கையகப்படுத்தப் பட்டிருந்த பிரதேசங்கள் விடுவிக்கப்பட்ட நிலையில் அந்தப் பகுதி மக்கள் தமது குடியிருப்புக்களை அமைத்ததுடன் தமது வழிபாட்டுத் தலங்களையும் புனரமைப்புச் செய்துள்ளனர். 2014 ஆம் ஆண்டு பிறப்ப தற்கு இன்னும் ஒரு நாளே உள்ள நிலையில் கிறிஸ்தவ ஆல்யங்களில் விசேட பூசை வழிபாடுகளும், கலை நிகழ்வு களும் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளன.
கிறிஸ்தவ ஆலயங்களில் இயேசு பாலன் பிறப்புக்கான மாட்டுத் தொழுவங்கள் அமைக் கப்பட்டுள்ளன. குறிப்பாக வலி. வடக்கு, மாதகல், சேந்தான்குளம், மணியம் தோட்டம் , தென்மராட்சி , முகமாலை உள்ளிட்ட பிரதேசங்களில் கிறிஸ்தவ ஆலயங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு புதுவருடத்துக் கான தயார்ப்படுத்தல்கள் இடம் பெற்று வருகின்றன. (வ-14)



*மல்வம் திருக்குடும்ப மாதா ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நத்தார் கொலு*

# குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்



வலி.தென்மேற்கு, டிசெ.30
குடாநாட்டில் கொள்ளை, வழிப்பறி, திருட்டு போன்ற பல குற்றச்செயல்களில் ஈடுபட்ட குடும்பஸ்தரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளம் குடும்பஸ்தர் ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்தனர் இதன்போது குடாநாட்டில் இடம் பெற்ற கொள்ளை, வழிப்பறி, திருட்டு போன்ற பத்துக்கும் மேற்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தமை தெரிய வந்துள்ளதுடன் திருடப்பட்ட பொருள்களில் ஒன்பது தங்கப் பவுண் உட்பட ஒரு பகுதியையும் கைப்பற்றினர். அதையடுத்து குடும்பஸ்தரை பொலிஸார் மல்லாகம் நீதிமன் றில் முன்னிலைப்படுத்திய போது நீதிவான் சந்தேக நபரை ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (வ-155)

# புதிய பஸ் கட்டண விவரப் பட்டியலை காட்சிப்படுத்துக

*பொதுமக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ.30
தனியார் பஸ்கள் கட்டண அதிகரிப்புச் செய்து 4 மாதங்கள் கடந்த நிலையிலும் அதிகமான தனியார் பஸ்களில் புதிய பஸ் கட்டண பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக புதிதாக பஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் நடத்துநர்களுடன் முரண்பட்டு வருகின்றனர்.
உள்ளூர்ச் சேவை மட்டுமல்லாது வெளிமாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கும் கட்டண அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. பஸ் கட்டண அதிகரிப்புச் செய்யப்பட்டமை தொடர்பான புதிய கட்டண விவரப் பட்டியல் பஸ்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டியது கட்டாயமானதாகும். எனினும் இந்த நடைமுறைகள் அதிகமான தனியார் பஸ்களில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. பழைய கட்டண விவரப் பட்டியலில் மட்டுமே ஒட்டப்பட்டுள்ளது.
இதன் காரணமாக திடீரென புதிதாக பஸ்களில் பயணிப்போர் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கட்டணத்துக்கு மேலதிகமாக கட்டணத்தை அறவிடுவதாக நடத்துநருடன் முரண்பட்டு வருகின்றனர்.
உள்ளூர்ச்சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களில் கட்டண வேறுபாடுகள் பெரிதாக இல்லாத போதும் வெளிமாவட்டங்களுக்கான தனியார் பஸ்களில் கட்டண வேறுபாடு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
எனவே புதிய கட்டண விவரப் பட்டியலை தனியார் பஸ்களில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

# மாகாண சபையை விடவும் உள்ளூராட்சி சபைகள் சிறந்தவை

## மாகாண சபை அவைத் தலைவர் தெரிவிப்பு

தென்மராட்சி, டிசெ.30
மாகாண சபையை விட உள்ளூராட்சிச் சபைகள் சிறந்தவை என நான் கருதுகிறேன். உள்ளூராட்சி மன்றங்கள் நேரடியாக நிதி அறவீடு மற்றும் சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சபையின் அதிகாரங்கள் போன்றவற்றின் மூலம் மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்க முடிகிறது என்று வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவ ஞானம் தெரிவித்தார்.

"–"

**உள்ளூராட்சி மன்றங்கள் நேரடியாக நிதி அறவீடு மற் றும் சபை எல்லைக்குட் பட்ட பகுதியில் சபையின் அதிகா ரங்கள் போன்றவற்றின் மூலம் மக்களுக்கு சேவைகளை வழங்க முடிகிறது**

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சி சபைகளைப் பொறுத்த வரையில் தவிசாளருடன் உறுப்பினர்களும், அனைத்து உறுப்பினர்களுடன் தவிசாளர்களும் இணைந்து செயற்பட்டால் நிச்சயம் ஒரு நல்லாட்சியை அந்த உள்ளூராட்சி பிரதேச மக்கள் அனுப விப்பர். இந்த வகையில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள இரண்டு பிரதேச சபைகளும் மக்களுக்குச் சேவை வழங்குவதில் தவிசாளர், உறுப்பினர் ஒருங்கிணைந்து செயற்படுவதால் இரண்டு உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த மக்கள் சிறந்த சேவைகளைப் பெற்று வருகின்றனர்.
25 வருடங்களின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையின் நிர்வாகச் செலவாக வழங்கப்பட்டுள்ள தொகை இரண்டு லட்சம் ரூபாவாகும்.
மாகாண நிதி மூல நியதிச் சட்டங்கள் தொடர்பான அறிக்கை கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஜனவரி மாத அமர்வில் அவை மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நிதிச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும். உள்ளூராட்சிச் சபைகள் தமது பிரதேச நிதி மூல உப விதிகளைத் தயாரித்து மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் - என்றார். (வ-9)

# சாவகச்சேரி பொதுச் சந்தையின் மேற்கு பகுதியில் கடைத் தொகுதி

தென்மராட்சி, டிசெ.30
சாவகச்சேரி பொதுச் சந்தை யின் மேற்குப் புறத்தில் ஜன வரி மாதத்தில் கடை அறைத் தொகுதிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று சாவகச்சேரி நகர சபை தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தெரிவித்தார்.
இந்தக் கட்டடத் தொகுதி அமைப் பதற்கு 2011 ஆம் ஆண்டு தொடக்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும் கட்டட அனுமதி பெறுவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக காலங்கடந்துவிட்டது.
மாகாண சபை பொறுப்பேற்ற பின்னரே கட்டடம் அமைப்பதற்கான அனுமதி கிடைத்ததால் ஜனவரியில் அதற்கான பணிகள் ஆரம்பமாகவுள்ளன எனவும் தெரிவித்தார். (வ-9)

# பெண்களுக்கான பயிற்சி வகுப்பு

வலி.தென்மேற்கு, டிசெ.30
மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்பட்டுவரும்பெண்களுக்கான பயிற்சி வகுப்பு 2014 ஆம் ஆண்டு உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் ஆரம்பிக் கப்படவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார்.
மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண்களுக்கான பயிற்சி நெறியை வருடாவருடம் கிராமங்கள் தோறும் நடத்தி வருகின்றது. அந்த வகையில் 2014 ஆம் ஆண்டுக்கான பயிற்சிநெறியை உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடத்த முன்வந்துள்ள பிரதேச செயலர், இதற்கான அனுமதி கோரி ஆனைக்கோட்டை உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருக்கும், செயலாளருக்கும் கடிதத்தை அனுப்பி வைத்ததுடன் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி நடைபெற விருக்கும் இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார். (வ-115)

## வேட்பாளர்களை நியமிப்பது ஜே.வி. பிக்கு எளிய செயல்

*ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.30
எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களுக்காக முதலமைச்சர் வேட்பாளர்களை நியமிப்பது ஜே.வி.பிக்கு எளிய செயல் என்று ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி தற்போது தங்களிடம் உள்ள ஆசனங்களை மாத்திரம் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளில் இறங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனினும் இது சம்பந்தமாக கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி, ஜே.வி.பி சுயாதீனமாக அரசியல் செயற்பாட்டை கொண்டிருப்பதாக தெரிவித்தார். (எ)

## தனியார் விரிவுரையாளர் தொடர்பில் ஆராயப்படும்

கொழும்பு, டிசெ.30
தனியார் பல்கலைக்கழகங்களில் சேவையாற்றுகின்ற விரிவுரையாளர்கள் தொடர்பில் ஆராயவிருப்பதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் முதல் இந்த செயற்பாடு நடைமுறைக்கு வரவுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதும் அரச பல்கலைக் கழகங்களுக்கு மேலதிகமாக தனியார் பல்கலைக்கழகங்கள் பல உருவாகியுள்ளன.

அவற்றைத் தரப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)



கொழும்பு 7இல் அமைந்துள்ள குதிரைப் பந்தயக் கட்டடத்தொகுதி நகர அபிவிருத்தித் திணைக்களத்தால் நவீன மயப்படுத்தப்பட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் கடைத்தொகுதிகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.
சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வியாழனன்று இதனை திறந்து வைத்தார். சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

## இறைச்சிக்காக திருடப்படும் கால்நடைகள்

கொழும்புத்துறை, டிசெ.30
வேலணை மண்கும்பான், சாட்டிப் பகுதிகளில் உள்ள கால்நடைகள் திருடப்பட்டு சட்டவிரோத இறைச்சித் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி மாடுகளுடன் வளர்ப்பு மாடுகளும் இந்தத் திருட்டு முயற்சிகளில் அபகரிக்கப்படுகின்றன.

இந்த திருட்டுகள் அந்தப் பகுதிகளுக்குப் பொறுப்பானவர்களின் துணையுடன் நடைபெறுவதால் மக்கள் எதிர் நடவடிக்கை மேற்கொள்ள அச்சப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக கால்நடைகள் அழிவுற்று வருவ்தால் அந்தப் பகுதிகளின் விவசாய மற்றும் பால் உற்பத்திகள் பாதிக்கப்படும் சாத்தியம் ஏற்படலாம் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-135)

## இலங்கைக்கு நவம்பரில் மட்டும் 1 லட்சத்து 12 ஆயிரம் உல்லாச பயணிகள்

கொழும்பு, டிசெ.30
கடந்த நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு வந்துள்ள உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 12 ஆயிரத்தையும் கடந்து மூன்று வீத வளர்ச்சியைக் காட்டியுள்ளதாக இலங்கை உல்லாச பயணத் துறை மேம்பாடுகள் அதிகார சபை தெரிவிக்கிறது.



இலங்கைக்கு உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ள காலகட்டங்களில் இரண்டாம் இடத்தைப் பெற்று கூடிய பெறுமதி பதிவாகியிருப்பது நவம்பர் மாதத்திலேயாகும் என்று அதிகார சபை தெரிவிக்கிறது.

அதற்கமைய இந்த ஆண்டின் முதல் 11 மாதங்களுக்குள் இலங்கை வந்துள்ள உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 16 ஆயிரத்து 228 பேர் என்பதோடு, அது கடந்த ஆண்டின் முதல் 11 மாத காலத்துள் பதிவாகியுள்ள உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 15 வீதமான வளர்ச்சி என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதற்கு முன்னர் 2012 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்திலேயே அதிகளவிலான உல்லாசப் பயணிகள் இந்த நாட்டுக்கு வந்துள்ளனர் என்றும், அந்தத் தொகை ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 252 பேர் என்றும் தெரியவந்துள்ளது.

இந்தப் பயணிகள் தொகைகளை கவனத்தில் கொண்டுள்ள இலங்கை உல்லாசப் பயண மேம்பாடுகள் அதிகார சபை எதிர்காலத்தில் இலங்கைக்கு அதிகளவிலான உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்கான எதிர்பார்ப்புகள் நிலவுவதாகவும் தெரிவித்துள்ளது. (ஒ-22)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அல்பேட் பீரிஸ் கனிஸ்தயான்



தோற்றம் 11.10.1989

மறைவு 29.12.2012

கண்ணீரை சந்திக்கிறோம்
எம் நண்பன் இல்லாதபோது
தனிமையில்தான் வாழ்கின்றோம் - நீ
இல்லாத ஊரில்...

மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள
நண்பனே நீ இல்லை அதனால்
மகிழ்ச்சியை நாம் உணர்வதே இல்லை!

நீ கற்றுக்
கொடுக்கவில்லையடா
உன்னை பிரிந்து வாழ...

எம் கரங்களாக இருந்தாய் - நீ
இல்லாத பொழுதிலே எம் கண்கள்
உன் பிரிவிலே கண்ணீர் சிந்துதடா!

எம் கண்கள் கலங்கினால்
உன் உதிரம் கொதிக்குமடா
இன்று உன்னை பிரிந்து வாழ்கிறோம்
கண்ணீரோடு அதை துடைக்க
வருவாயா நண்பனே...!!!

கப்பினஸ் குறூப்,
பாஷையூர்.

(41825)(10.6.3)

# உயர்தர வகுப்புக்களை உடனடியாக ஆரம்பிக்கவும்

*முத்துஐயன்கட்டில் பெற்றோர் கோரிக்கை*

முல்லைத்தீவு, டிசெ.30

முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்குமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இந்தப் பாடசாலையில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரையான வகுப்புக்களே இடம்பெற்று வருகின்றன. சுமார் 500 மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் 20 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

இந்தப் பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் இன்னமும் ஆரம்பிக்கப்படாத நிலையில் இந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் நீண்டதூரம் சென்று வேறு பாடசாலைகளில் தமது உயர் கல்வியைத் தொடர்கின்றனர்.

உயர்தரத்தில் கலைப் பிரிவுடன் கணித, விஞ்ஞான பிரிவுகளும் ஆரம்பித்தால் மாணவர்கள் அதிகளவில் நன்மை அடைவார்கள் எனவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

**"–"**

**சுமார் 500 மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் 20 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.**

போர்மற்றும் இடப்பெயர்வினால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். மாணவர்களின் கல்வி நிலையும் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பகுதி மாணவர்களின் கல்வி நிலை உயர்வடைவதற்கு கல்வி அதிகாரிகள் உதவ வேண்டுமெனவும் பெற்றோர் தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர். (க-500)

# பொலிஸ் நிலையங்களை தரமுயர்த்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.30

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன், தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்களைத் தரமுயர்த்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொலிஸ் நிலையங்களைத் தரமுயர்த்துவதன் மூலமாக அந்தப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் சிரமங்களைக் குறைக்க முடியும். தற்போது சகல தேவைகளுக்கும் மக்கள் கிளிநொச்சிக்கே செல்லவேண்டிய நிலைகாணப்படுகின்றது.

எதிர்காலத்தில் தருமபுரம், அக்கராயன் பொலிஸ் நிலையங்களைத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-18)

# நெருக்கடியான நிலையில் மாணவர்கள் சாதனை

*பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பெருமிதம்*

அக்கராயன், டிசெ.30

நெருக்கடியான சூழலிலும் மாணவர்கள் கல்வியில் சாதனைகளை நிலை நாட்டுவது மகிழ்ச்சி தருகின்றது. இவ்வாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவு மீள்குடியமர்வு இடம்பெறும் பகுதியாகும். மீள்குடியமர்ந்த குடும்பங்கள் வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

நெருக்கடியான குடும்ப சூழலிலும் இங்குள்ள மாணவர்கள் கல்வியில் சாதனை நிலை நாட்டி வருகின்றமை மகிழ்ச்சி தருகின்றது" என அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர் செல்வி பாலபத்மினிதேவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி கோட்டக் கல்வி அலுவலர் சு.ஆனந்தசிவம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**"–"**

**பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவு மீள்குடியமர்வு இடம் பெறும் பகுதியாகும். மீள்குடியமர்ந்த குடும்பங்கள் வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.**

பளை மத்திய கல்லூரியில் இருந்து தனியாகப் பிரிந்து இயங்கி வரும் பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் எவ்வித கட்டட வசதிகளும் இல்லாத நிலையில் தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



கிளிநொச்சி கனகபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராசா திறந்து வைத்தார். (க-6)

## கரைதுறைப்பற்றுக்கு புதிய பிரதேச செயலர்

புதுக்குடியிருப்பு, டிசெ.30

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலராக திருச்செல்வம் திரேஸ்குமார் பொறுப்பேற்றுள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலராகக் கடமையாற்றிய எஸ்.குகநாதன் இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து கடந்த 5 மாதங்களாக உதவிப் பிரதேச செயலர் இ.குருபரன் பதில் பிரதேச செயலராகக் கடமையாற்றி வந்தார்.

இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலராகக் கடமையாற்றிய தி.திரேஸ்குமார் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டார். இவர் கடந்த 26 ஆம் திகதி உத்தியோக பூர்வமாகத் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (க-400)

## சிறுவர் இல்லத்துக்கு அன்பளிப்பு

வவுனியா கோயிற்குளம் சிவன் கோயில் சிறுவர் இல்லத்துக்கு பொலிஸாரால் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கடந்த 25 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் ஆலய மண்டபத்தில் வைத்து இந்தப் பொருள்கள் வவுனியா பொலிஸாரால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிறுவர்களுக்கான பாடசாலைப் பைகள், சப்பாத்து மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் இறுதியில் அன்னதான நிகழ்வும் இடம்பெற்றுள்ளது. (க-421)

# அளம்பில் மருத்துவமனையில் சிறந்த சேவையை வழங்கவும்

*44 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு, டிசெ.30

முல்லைத்தீவு அளம்பில் பிரதேச மருத்துவ மனையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதுடன் தமக்குச் சிறந்த மருத்துவ சேவைகளைப் பெற்றுத் தருமாறு இந்த மருத்துவமனையைப் பயன்படுத்தும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் இந்த மருத்துவமனை அமைந்துள்ளது.

தற்போது அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும், நிரந்தர மருத்துவர் இன்றியும் இந்த மருத்துவமனை இயங்கி வருகின்றது. இதனால் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

**"–"**

**சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.**

அளம்பில் வடக்கு அளம்பில் தெற்கு, செம்மலை, செம்மலை கிழக்கு, உப்புமாவெளி, குமுழமுனை மேற்கு, குமுழமுனை கிழக்கு, குமுழமுனை மத்தி, தண்ணி முறிப்பு உள்ளிட்ட சுமார் 44 கிராமங்களில் வசிக்கின்ற ஆயிரத்து 978 குடும்பங்களும், கொக்கிளாய் கிழக்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் உள்ளிட்ட கிராமங்களில் வசிக்கின்ற 100 குடும்பங்களும் இந்த மருத்துவ மனையையே நம்பியுள்ள போதிலும் சீரான மருத்துவ சேவைகள் வழங்கப்படாததால் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். (க-6)


# வவுனியா கற்குளத்தில் தொல்லை தரும் யானைகள்


வவுனியா, டிசெ.30

வவுனியா கற்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதால் தாம் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கற்குளம் பகுதியில் காட்டு யானைகள் குடிமனைக்குள் புகுந்து பெருமளவான பயன்தரு மரங்களையும், செய்கை பண்ணப்பட்ட பயிர்களையும் அழித்து வருகின்றன.

கடந்த காலத்தில் யானைகள் உட்பட காட்டு விலங்குகளின் தொல்லைகள் இன்றித் தாம் இந்தப் பகுதியில் வாழ்ந்ததாகவும் தற்போது யானைகளின் தொல்லை அதிகரித்திருப்பது தமக்குத் தினமும் அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.





இந்த யானைகள் தென்பகுதியில் பிடிக்கப்பட்டு பின்னர் இந்தப்பகுதிக்காடுகளில்கொண்டு வந்து விடப்பட்டவையாக இருக்கலாமெனவும் கற்குளம் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவற்றைக் கட்டுப்படுத்தித் தமது பயிர்ச் செய்கைகளையும் பயன்தரு மரங்களையும் பாதுகாத்து உதவவேண்டும்எனவும் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# கொல்களத்து கழிவுகளால் குடும்பங்களுக்கு பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.30

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் அமைந்துள்ள கொல்களத்தில் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுகள் கண்டபடி வீசப்படுவதால் இந்தப் பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

அம்பாள்குளம் பகுதியில் கடந்த 2010 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தக் கொல்களத்தில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்பட்டு வருகின்றன. இதனால் இந்தப் பகுதியில் வசிக்கும் 20க்கும் அதிகமான குடும்பங்கள் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொண்டு வருகின்றன. இந்தக் கொல்களத்தை அகற்றுமாறு பலதடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இன்றுவரை அந்த இடத்திலேயே இயங்கி வருகின்றது. இதனால் அங்கு வீசப்படும் கழிவுகளில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றது.

**"–"**

**அம்பாள்குளம் பகுதியில் கடந்த 2010 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தக் கொல்களத்தில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்பட்டு வருகின்றன.**

எனவே இந்தக் கொல்களத்தை உடனடியாக இந்தப் பகுதியில் இருந்து அகற்ற வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாலுக்குப் பின்னால் தலையாட வைக்கும் விபரீத எண்ணம் உயர அனுமதியாதீர்...?

வடமாகாணசபை அமைக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துள்ளபோதிலும் ஆளுநர் - முதலமைச்சர் - மாகாண செயலாளர் ஆகியோருக்கு இடையிலான முறுகல் நிலை முடிவுக்கு வராத சூழ்நிலை காணப்படுகிறது. இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் நடந்த தேர்தலில் தமிழ் மக்களின் பெருத்த எதிர்பார்ப்புகளுடன் வடமாகாணத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த முறுகல்நிலை காரணமாகத் தனது பணியைச் செவ்வனே மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதிகாரப் பரவல், மாகாணசபைகள் என்று பெரிய அளவில் பேசப்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையில், இவையெல்லாம் வெறும் பேச்சளவில்தான் என்பதை வடமாகாணத்தில் இடம் பெறும் சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

அரசின் பிரதிநிதியாகச் செயற்படும் பலம் பொருந்திய ஆளுநர், ஆளுநரின் செல்வாக்குக்கு மட்டுமே உட்பட்ட மாகாண செயலாளர் ஆகியோர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபையின் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாக இருந்து வருகின்றனர். முன்னாள் இராணுவ அதிகாரியான ஆளுநரை இடமாற்றம் செய்வதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தற்காலிகமாகத் தீர்வு காணமுடியும்.

யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவை இடமாற்றம் செய்யும் அரசதரப்பு, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சபை நிர்வாகத்துடன் முரண்பட்டுக்கொண்டிருக்கும் ஆளுநரை தொடர்ந்து பதவியில் வைத்திருக்க முனைகிறது. ஆளுநருக்கும் முதலமைச்சருக்குமிடையிலான முரண்பாடுகள் தீருவதற்கான அறிகுறி இதுவரை தென்படவில்லை. அது நாளொரு மேனியும் , பொழுதொரு வண்ணமுமாக ஊதிப் பெருத்து வருகிறது. இது எந்த வகையிலும் ஏற்புடையதல்லவே.

இத்தகைய இருள் சூழ்ந்த நிலையில், வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று எதிர்வரும் தினங்களில் நடைபெறவிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள் ளன. இந்தச் சந்திப்பின் பின்னர் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதியைச் சந்திக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசமைப்பில் மாற்றம் செய்வது தொடர்பான தெரிவுக்குழுவில் இடம்பெறப்போவதில்லை என்று அறிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசின் அறிவுறுத்தலின் பேரில் புள்ளி விவரவியல் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள போர் இழப்பீடுகள், சொத்து இழப்பீடுகள் தொடர்பான கணக்கெடுப்பையும் நிராகரித்து தனது கடுமையான போக்கை வெளிப்படுத்தியுள்ளது. கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழுள்ள வடமாகாணசபை, அரசுடன் முரண்படுவது அரசுக்கு இருக்கப்போகிறது. அரசின் மிதவாதமும் உள்ளூறிய இனவாதமும், இனப்பிரச்சினையை நீறுபூத்த நெருப்பாகி விடுமோ என்ற வினாவையும் நீட்டி உயர்த்தி நிற்கிறது. கடந்த காலங்களில் வேண்டாத மோதல்களையும் போராட்டங்களையும் கண்ட வடக்கில் முரண்பாடுகள் காரணமாக அமைதிக்கான வாய்ப்புகள் அருகி வருவது, கண்ணுக்கு எட்டக்கூடிய தூரத்தில் தெரிகிறது அல்லவா? இத்தகைய நிலைமையை அனுமதிப்பது தீவிரவாதத்துக்கும் பிரிவினை வாதத்துக்குமே வழிவகுக்கும் என்பது அரச மேதாவிகளுக்குத் தெரியாதா?

வடமாகாணத்துக்கான தேர்தல் குறித்த அறிவிப்பை தேர்தல்கள் ஆணையாளர் விடுத்தபோது, கூட்டமைப்பின் வெற்றி அரசால் எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழ் உள்ள ஒரு மாகாணசபை எப்படிச் செயற்படும் என்பதை அரசதரப்பு கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

வடமாகாணசபை தவிர நாட்டிலுள்ள ஏனைய எட்டு மாகாணசபைகளும் ஆளுநர் ஒருவர் இருக்கிறார் என்பது கூடத் தெரியாத நிலையில் சுமுகமாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. வடமாகாணசபை சுயமாக இயங்க முடியாது ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால் ஆளுநர் - முதலமைச்சர் விவகாரம் நாளாந்தம் ஊடகங்களில் பிரதான இடத்தைப் பிடித்து வருகிறது. முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் இடையிலான முரண்பாடு இரு தனி நபர்களுக்கிடையிலான முரண்பாடு அல்ல. மத்திய அரசுக்கும் மாகாண நிர்வாகத்துக்கும் இடையிலான முரண்பாடு. இதனை அனைத்துலகமும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய அவசரமும் அவசியமும் உண்டு.

மக்கள் தமது வாக்குப் பலம் கொண்டு தெரிவுசெய்த சபை இயங்கும்போது இராணுவ அதிகாரி ஒருவர் எப்படி ஆளுநராக இருக்கமுடியும்? தற்போதைய நெருக்கடிகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் அதுவே என்பதனை உணராது அரசு செயற்படுவது ஏன்? இது திட்டமிட்ட நிர்வாகச் சதி அன்றி வேறல்ல.

வடக்கில் தேர்தலை நடத்தினால் மட்டும் போதாது. தேர்தலை நடத்திவிட்டு, மாகாணசபையின் சுயாதீனமான செயற்பாட்டுக்குத் தடங்கல் விளைவிப்பதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. வடமாகாணசபை கலைக்கப்படவேண்டும், கூட்டமைப்பு தடைசெய்யப்படவேண்டும் என்று பேரினவாதிகள் கூச்சல் போடுகிறார்கள். பிரச்சினைகள், முரண்பாடுகள் வளருவது இனவாதிகளுக்கே தீனியாகிறது. முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவந்து வடமாகாணசபை சுயாதீனமாக இயங்க அனுமதிப்பது அரசின் பொறுப்பு.

# இந்தியாவும்
## தென்னாசியாவுக்கான வெளியுறவுக்கொள்கையும்

இந்தியாவானது தென்னாசியாவின் மையமாக விளங்குகிறது. இந்தியாவின் உள்ளகப் பாதுகாப்புக்கு எழும் அச்சுறுத்தலானது இந்திய மாக்கடல் பிராந்தியத்துக்கே அச்சுறுத்தலாக எழும் என்கின்ற நியாயத்தை இந்தியா கவனத்திற் கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலரான நிருபமா ராவ் தெரிவித்துள்ளார். பொருளாதார விவகாரங்களைப் பொறுத்தளவில் பூகோள மூலோபாய விவகாரங்களில் ஏற்பட்டுள்ள துரித மாற்றங்கள் இந்தியாவுக்கும் பசுபிக் சமுத்திர நாடுகளுக்கும் முக்கியமானதாக உள்ளன. இந்த மாற்றங்கள் இந்தியாவின் தென்னாசியாவிலுள்ள அயல்நாடுகளும் வளைகுடாப் பிராந்திய நாடுகளும் தமக்கான கொள்கைகளை வகுப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள இவ்வாறான துரித மாற்றங்கள் இந்தியாவுக்குப் பெரும் அச்சுறுத்தலாக எழுந்துள்ளன.

இந்தியாவின் பூகோள அமைவிடம், பிராந்திய அளவு, பொருளாதாரம், அபிவிருத்தி, இராணுவத்திறன், மக்கள் தொகை போன்ற பல்வேறு சாதகமான காரணிகள் மூலம் இந்தியாவானது தென்னாசியாவில் ஒரு வல்லாதிக்க நாடாகவும் மத்திய பிரசன்னம் மிக்க ஒரு நாடாகவும் விளங்குகிறது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் தவிர இந்தியாவின் ஏனைய அயல் நாடுகள் தமக்கிடையில் தொடர்புகளையும் போக்குவரத்துக்களையும் மேற்கொள்வதற்கு இந்தியாவை நாடுகின்றன. அதாவது இந்த நாடுகள் இந்தியக் கடல், இந்தியாவின் வான் பிரதேசம், தரைப் பிரதேசம் ஆகிய மூன்று மார்க்கங்களையும் பயன்படுத்துகின்றன. இந்தியாவும் இதன் தென்னாசிய அயல்நாடுகளும் இனம், மொழி, கலாசாரம், பொதுவான வரலாற்று அனுபவங்கள் போன்றவற்றால் தமக்கிடையே கட்டுப்பட்டுள்ளன. இமயமலை மற்றும் இந்து சமுத்திரம் போன்றன இந்தியாவின் பௌதிக எல்லைகளாக உள்ளன. இதே போன்று இவையிரண்டும் தென்னா சியாவுக்கும் இதன் பிராந்தியத்துக்கும் எல்லைகளாக உள்ளன. இந்தியாவா னது தென்னாசியாவின் மையமாக விளங்குகிறது. இந்தியாவின் உள்ள கப் பாதுகாப்புக்கு எழும் அச்சுறுத்தலானது இந்து சமுத்திர பிராந்தி யத்துக்கே அச்சுறுத்தலாக எழும் என்கின்ற நியாயத்தை இந்தியா கவனத்திற் கொள்ளவேண்டும். இந்தியா தனது பாதுகாப்பில் எவ்வித இடைவெளியும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே தனது தென்னாசிய நாடுகளுடன் மிகச் சிறந்த அயல்நாட்டு கொள்கையைக் கடைப்பிடித்துவருகிறது. இதனால் இந்தியா தனது பாதுகாப்பில் மிகத் தீவிர ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள தீவிரவாதக் கிளர்ச்சிகள் மற்றும் இந் தியாவுக்குள்ளே அதிகரித்துள்ள பயங்கரவாத நடவடிக்கைகள் போன்றன இந்தியாவின் பாதுகாப்புக்கு சவாலாக உள்ளன.

இந்தியாவானது தனக்கு எதிராக எழுந்துள்ள இராணுவ அச்சுறுத்தல்கள், இராணுவ ஊடுருவல்கள் மற்றும் ஏனைய நாடுகளின் இராணுவப் பலங்களுக்கு ஈடுகொடுக்க வேண்டியுள்ளது. இந்தியாவின் எல்லைகளில் போரை மேற்கொண்டு வரும் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்றவற்றில் செயற்படும் பயங்கரவாதக் குழுக்கள் மூலம் அங்கு வாழும் மக்களுக்கு சமாதானத்தைக் கொண் டுவர முடியாது . ஆப்கானிய மக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு உண்டு. இதனால் இந்தியா ஒருபோதும் ஆப் கான் மக்களைக் கைவிட மாட் டாது. இதனால் இந்தியா தொடர்ந்தும் ஆப்கானில் சுமுகமான நிலையைத் தோற்றுவிப் பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது.

இதேபோன்று பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி சீர்குலைந்துள்ளது. இந்த நிலையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதல்கள், முரண்பாடுகள் போன்றன களையப் பட்டு இவ்விரு நாடுகளும் தாமாகவே தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். மிகப் பெரிய அனைத்துலக அரங்கில் இந்தியா பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். இந்தியா அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேணிவருகிறது. 2014 இல் அமெரிக்காவும் இதன் கூட்டணிப் படைகளும் ஆப்கானிலிருந்து முற்று முழுதாக வெளியேறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில் ஆப்கான் விவகாரம் தொடர்பில் இந்தியாவானது தனக்குச் சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இந்தியாவின் மூலோபாயக் கொள்கைத் திட்டமிடலாளர்கள் இதனைத் தமது கருத்திற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. ஆப்கானில் நிலை கொண்டுள்ள தலிபான் தீவிரவாதிகள் தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதற்கான எவ்வித அறிவிப்புக்களையும் மேற்கொள்ளவில்லை. ஆப்கானில் இந்தியா தனது தலையீடுகளை மேற்கொள்ளாவிட்டால், இது இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் தலையிடியாக அமையும்.

2001 இல்இருந்து இந்தியா இவ்வாறானதொரு சூழலுக்கு முகங் கொடுத்து வருகிறது. ஆப்கானின் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றிக் கொள்வார்கள் என்கின்ற நிலை உருவானால் கூட இந்தியாவானது தனது நடவடிக்கை களிலிருந்து தளர்ந்து விடக்கூடாது. தொடர்ந்தும் அனைத்துலக மற்றும் பிராந்தியக் கூட்டணி நாடுகளின் உதவியுடனும் பலத்துடனும் ஆப்கானில் ஜனநாயக ஆட்சியை நிலை நிறுத்துவதில் இந்தியா தயக்கம் காண்பிக்கக்கூடாது. இதன்மூலம் ஆப்கானில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசானது தனது நாட்டில் செயற்படும் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போரை மேற்கொள்வதில் தளர் வடையக் கூடாது என்பதை இந்தியா நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்தியாவின் வடகிழக்கில் அமைந்துள்ள நாடுகள் பங்களாதேஷின் ஊடாக இந்தியாவுடன் தொடர்புகளைப் பேணு வதால் இவை பல நலன்களை அடைந்து கொள்கின்றன. இது வட கிழக்கில் குறிப்பிடத்தக்க ஓர் அபி விருத்தி ஏற்பட்டுள்ளது என்பதைச் சுட்டிநிற்கிறது. இந்திய மத்திய அரசின் ஆதிக்கசக்தியாக இதன் வெளியுறவுக் கொள்கையே அமைந்துள்ளது. பங்களாதேஷின் அனைத்து மாநிலங்களும் அதன் மத்திய அரசின் கீழ் ஒன்றி ணைந்து செயற்படுகின்ற நிலையை இந்திய மத்திய அரசு தோற்றுவிக்க வேண்டும். இதேபோன்று நேபாளத்துடன் உறவைப் பேணவேண்டியது இந்தியாவுக்கு மிக முக்கியமானதாகும். நேபாளமானது இந்தியாவின் ஆதரவுடன் தனது நட வடிக்கைகளை மேற் கொள்வதற்கான மூலோபாயத்தை இந் தியா வகுத்துக்கொள்ளவேண்டும். நேபாளம், பங்களாதேஷ் போன்ற அயல் நாடுகளின் தேவைகளைக் கவனத்திற் கொண்டு அவற்றை இந்தியா பெருந்தன் மையுடன் வழங்குவதன் மூலம் பிராந்தியத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளையில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பையும் இது வலுப்படுத்தும்.

தென்கிழக்காசியாவின் பிரதான நுழைவாயிலாக மியன்மார் உள்ளது. இதன் வடக்குப் பகுதியானது இந்திய-சீன-மியன்மார் முக்கோணத் தரைத்தோற்றத்துடன் தொடர்புபட்டதாகும். மியன்மாரில் எழுந்துள்ள தீவிரவாதக் கிளர்ச்சிகளை முறியடிப்பதற்கு இந்தியாவால் வழங்கப்படும் பாதுகாப்பு ஒத்துழைப்பானது மிகவும் முக்கியமானதாகும். இதனால் மியன்மாருடன் மிகவும் நெருக்கமான உறவை இந்தியா பேணிக் கொள்ள வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தளவில், இந்தியா மட்டுமே இதன் அயல்நாடாகும். இலங்கையில் முப்பது ஆண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டு போரானது அங்கு வாழும் பல சமூகங்களின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கியுள்ளது. ஆனால் வடக்குகிழக்கில் வாழும் தமிழ் மக்களை விட வேறெந்த சமூகத்தவரும் மிகமோசமான பாதிப்பைச் சந்திக்கவில்லை. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதானது இந்தியாவுக்கு மிகப் பெரும் துன்பியல் சம்பவமாக உள்ளது.

இலங்கையில் நீண்ட காலமாகத் தொடர்ந்த உள்நாட்டு போரானது தற்போது முடிவுக்குக் கொண்டுவரப் பட்டதானது இலங்கையில் மீளிணக்கப்பாட்டை ஏற் படுத்துவதற்கும் போரின் காயங்களை ஆற்றுவதற்கும் கிடைத் துள்ள மிகவும் அற்புதமான வாய்ப்பா கும். இதன்மூலம் இலங்கயில் வாழும் சமூகங்கங்களுக்கி டையில் ஏற்பட்டுள்ள கசப்புக்கள் தீர்க்கப்பட முடியும். இலங் கையில் வாழும் தமிழ் மக்கள் சுய மரியாதையுடன், சம உரிமை வழங் கப்பட்டு மதிக்கப்பட வேண்டும். இதற்கு இந்தியா தனது உதவியை வழங்க வேண்டும்.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு போன்றன கடற்பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் தமக்கிடையே முத்தரப்பு உடன்படிக்கையைக் கொண்டுள்ளன. இதன்மூலம் எமது பிராந்தியத்தில் பயனுள்ள வினைத்திறனான அபிவிருத்தியை மேற்கொண்டு பிராந்தியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சீனா எம்முடைய மிகப் பெரிய அயல் நாடாக உள்ளது. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுநிலையில் விரிசல் ஏற்பட்டாலும் கூட அதனை சீர் செய்துகொள்ள வேண்டும். இதற்கான சவால்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும். சீனா என்கின்ற காரணி இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றது. சீனாவின் பிராந்தியச் செல்வாக்கு மற்றும் இராணுவ ஆற்றல்கள் போன்றன இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் முரண்பாட்டைத் தோற்று விக்கின்றன. கடந்த 50 ஆண்டுகளாக பிராந்திய எல்லைப் பிரச்சினை தொடர்ந் தாலும் கூட, இந்தியாவானது எல்லாவற் றையும் சமாளித்து சீனாவுடன் நல்லுற வைப் பேணவேண்டும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரை முன்னெடுப்பதில் இந்தியாவுக்கு மேற்கு ஆசியா மிகவும் முக்கியமானதாகும். மேற்கு ஆசியாவில் வாழும் 6.5 மில்லியன் வரையான இந்தியர்களின் நலன் கருதி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்தியாவானது மேற்காசியாவில் பயங்கரவாதத்தைத் தோற்கடித்து கடற்கொள்ளையர்களை முற்றாக ஒழிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது. பலஸ்தீனிய விவகாரமோ அல்லது ஈரானின் அணுவாயுதப் பிரச்சினையோ எதுவானாலும் இந்தியா மிகவும் விழிப்புடனும் ஆர்வத்துடனும் தலையீடு செய்து பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். தற்போதைய பிரச்சினைகளையும் அதற்கான சாத்தியங்களையும் தெளிவாக விளங்கிக் கொண்டு அனைத்துலக அரங்கில் ஒரு சுமுகமான சூழலை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை இந்தியா ஆராய்ந்து செயற்பட வேண்டும். *நன்றி -த இந்து*


# தரமான கல்விக்கு

## ஆசிரியர், மாணவர் தொடர்பு அவசியம்

ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான நேரான உறவு நிலை காணப்படாமையே மாண வர்களின் இடைவில கலுக்கான பிரதான காரணியாகுமெனக் கூறப்படுகின்றது. எனவே இடைவிலகலை இல்லாது செய்ய வேண்டு மானால் ஆசிரியர் மாணவர் உறவு வலுப்பட வேண்டியது அவசியமாகும். பிள்ளையின் தனிப்பட்ட பின்னணியையும் அவனது எதிர்பார்ப்புகளையும் அறிந்து கொள்ளவும் அதற்கான வகுப்பறைச் செயற்பாடுகளை ஒன்றிணைக்கவும் நேரான உறவு நிலை நிலவுதல் அவசியமானதாகும்.



வகுப்பறையில் பொருத்தப்பாடான மாதிரி நடத்தைகளை வெளிக்காட்டுவதன் ஊடாக மாணவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துநராக ஆசிரியர் விளங்குதல் அவசியமாகும்.



நடேசு தயாளன்

கல்வியின் தரம் உயரவும் கல்வி வாய்ப்புக்கள் விரிவடையவும் ஆசிரியரது அர்ப்பணிப்பான பங்குபற்றுதல் இன்றியமையாததாகும். ஆசிரியருடைய ஆளுமைத் திறன், கல்விசார் அடைவுகள், மாணவர்களை வழிப்படுத்தும் பாங்கு, பிள்ளைகளை அறிவார்ந்தவர்களாக மாற்றும் திறன் என்பன ஆசிரியரை உயர் நிலைக்கு இட்டுச் செல்வதோடு அவர்சார்ந்த பாடசாலையின் புலக்காட்சியையும் சமூகத்தில் மேம்படுத்தியதாகவே விளங்கும். இத்தகைய நிலை எய்தப்படுவதில் பல காரணிகள் செல் வாக்குச் செலுத்துவதாக இருந்தாலும் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான நேர்த் தொடர்புகள் மேலோங்கி விளங்குதல் மிகவும் இன்றியமையாததாகும். இத்தகைய விருத்தியை எட்டுவதற்கு கல்வியியலாளர்களது பார்வைப் புலம் செல்லுதல் அவசியமாகும். பெரும்பாலான அறிகைக் கோட்பாடுகள் கற்றல் என்பதனைச் சமூகச் செயன்முறை எனவே கொள்கின்றன. பிள்ளைகளின் கல்வி வெற்றிக்கு ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே உணர்வுபூர்வமான தொடர்பு இருத்தல் அவசியமாகும்.

### உறவுநிலை பேண நேரடித் தொடர்பு தேவை

மாணவர்களைப் பொறுத்தவரையில் ஆசிரியர் மாணவர் உறவு என்பது இன்றியமையாததாகும். ஏறக்குறைய ஒரு வருடத்தின் பத்து மாதங்களில் நாளாந்தம் சராசரியாக ஆறு மணி நேரம் மாணவன் ஆசிரியருடன் செலவிட வேண்டியுள்ளது. ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான நேரான தொடர்பினைக் கட்டியெழுப்புதல் என்பது மிகவும் கடினமான பணியாகும். எனினும் இருவரில் ஒருவர் அதனைக் கட்டியெழுப்புவதில் முனைப்புள்ளவராகவே விளங்குகின்றார்.

ஆசிரியர் மாணவரிடையேயான நேரான தொடர்பானது வகுப்பறையை மாணவன் மகிழ்வுடைய கற்றல் இடமாகக் கருத வழிவகுக்கும் என்பதோடு கல்வி அடைவு மட்டத்தை விருத்தி செய்யவும் உதவும். வகுப்பறையில் நிலவும் தடைகளை நீக்கவும் உதவும். ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான நேரான தொடர்பானது மாணவர்களிடம் எது அடையப்பட வேண்டும் என்பது தொடர்பான எதிர்பார்க்கை தொடர்பில் மாணவனை வழிப்படுத்துவதாக இருக்கும். கல்வியியலாளர்களின் கருத்தின்படி ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான நேரான உறவு நிலை காணப்படாமையே மாண வர்களின் இடைவில கலுக்கான பிரதான காரணியாகுமென கூறப்படுகின்றது. எனவே இடைவிலகலை இல்லாது செய்ய வேண்டுமானால் ஆசிரியர் மாணவர் உறவுவலுப்பட வேண்டியது அவசியமாகும்.

### சஞ்சிகை ஆக்கச் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தல்

பிள்ளையின் தனிப்பட்ட பின்னணியையும் அவனது எதிர்பார்க்கைகளையும் அறிந்து கொள்ளவும் அதற்கான வகுப்பறைச் செயற்பாடுகளை ஒன்றிணைக்கவும் நேரான உறவு நிலை நிலவுதல் அவசியமானதாகும். அதுமட்டுமன்றி சஞ்சிகை ஆக்கச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வதோடு அவற்றைப் பற்றிய கலந்துரையாடலை மேற்கொள்வதனூடாக அவர்களின் அபிலாசைகளை ஓங்கி ஒலிக்கச் செய்யலாம். மனவெழுச்சி சார்ந்த கற்றல் வாய்ப்புக்களை அமுலாக்குவதன் மூலம் மாணவர்களது இயலுமைகளை அதிகரிப்பதனூடாக தமது மனவெழுச்சிகளை புரிந்து கொள்ளச் செய்ய முடியும். வகுப்பறையில் இயங்கியல் நிலையினை அதிகரித்துச் செய்வதோடு மாணவர்களது பதகளிப்பு நிலையையும் இல்லாது செய்யலாம். வகுப்பறையில் பொருத்தப்பாடான மாதிரி நடத்தைகளை வெளிக்காட்டுவதன் ஊடாக மாணவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துநராக ஆசிரியர் விளங்குதல் அவசியமாகும்.

### தொடரான கண்காணிப்பு அவசியம்

ஆசிரியர்கள் மாணவர்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதனூடாக மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை அறிந்து கொள்ள முடியும். மாணவர்களது பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளல், அவனது பய உணர்வுகள் குழப்ப நிலைகளைப் புரிந்து கொள்வதனூடாக மாணவனின் கற்றல் பிரச்சினைகளை இனங்காண முடியும். இவ்வாறு மாணவனின் பிரச்சினைகளை இனங்கண்ட ஆசிரியரே மாணவர்கள் தொடர்பில் அதிக பொறுமையைப் பேணுபவராக விளங்க முடியும். பாடசாலையில் ஆசிரியர்களானவர்கள் பிள்ளையினது வேறுபாடான கலாசாரம், குடும்பப் பின்னணியை அறிந்திருத் தல் அவசியமானதாகும்.

இதன் மூலமே ஆசிரியரதும் பிள்ளையினதும் பொது உணர்வு நிலையை உணர்ந்து கொள்ளமுடியும். பிள்ளைன் கலாசார நிலை புரிந்து கொள்ளப்பட்டிருப்பதனை ஆசிரியர் வெளிக்காட்டும் போது பிள்ளைக்கும் ஆசிரியருக்கும் இடையி லான உறவு நிலை வலுவடையும். பிள்ளையிடம் ஆசிரியர் உரத்த ஒலி எழுப்பிக் கற்பித்தலானது பிள்ளைக்கும் ஆசிரியருக்கும் இடையிலான உறவு நிலையில் பாதிப்பை உண்டு பண்ணும்.

எனவே ஆசிரியர் மாணவர் மீது கணிப்பொன்றை வைத்திருப்பாராயின், மாணவன் உள்ளத்தில் ஊக்கல் நிலை யேற்பட வகுப்பறையில் சிறந்த கற்றல் நிகழும். கடுமையான சர்வாதிகாரத் தன்மை கொண்ட ஆசிரியரானவர் இவ்வாறான வாய்ப்பை இழந்தவராகின்றார்.

### அன்புடன் நடந்தால் மாணவரின் மதிப்பு உயரும்

மாணவர்கள் கருணையுடனும், கணிப்புடனும் நடத்தப்படுவார்களானால் மாணவர்களும் ஆசிரியர்களைக் கனம் பண்ணுவதுடன் தமது கற்றலின் அவசியத்தையும் உணர்ந்தவராவார். ஆசிரியரானவர்கள் பொருத்தமான வரையறைக்குட்பட்ட நிலையில் மாணவர்களை ஊக்கப்படுத்துவார்களாயின் மாணவர்களது கற்றலும் மேம்படும். வகுப்பறையில் மாணவர்களுக்கு தமது சக பாடிகளால் சூட்டப்படும் பல் வேறு பட்ட பட்டப் பெயர்கள் தொடர்பில் ஆசிரியரது கவனம் இழக் கப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த மாண வர்கள் உள அழுத் தத்துக் குள்ளாகி கற்றலில் இருந்து விலகிச் செல்லும் நிலையும் உருவாகும். இத்தகைய நிலையை எதிர்கொள்ளும் மாணவர்கள் கற்றலில் இடையூறுகளை எதிர்கொள்பவர் ஆக மாறுவர். இந்த நிலையானது அவர்களது கற்றலை மட்டுமல்ல அவர்களது சுயம்மீதே வினா எழுப்புவதாக இருக்கும். எனவே மாணவர்கள் ஒருவரை ஒருவர் மதிக்கும் நிலையை உருவாக்க வேண்டியதும் ஆசிரியரது கடமையாகும். இங்கு மாணவர்கள் ஒவ்வொருவரது சுயத் தைக் கட்டியெழுப்புவதும் ஆசிரியரது கடமையாக இருக்கவேண்டும்.

### சலிப்பு நிலை தொடராது பாதுகாக்க வேண்டும்

ஆசிரியரானவர் வகுப்பறையில் ஒவ்வோர் நாளும் ஒவ்வொரு நேரத்திலும் புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருப்பர். மாணவர்கள் வகுப்பறையில் சலிப்பு நிலையை அனுபவிக்கும் நிலை தொடருமானால் ஆசிரியரும், மாணவரும் எதிர்பார்க்கும் வெளியீடுகள் எட்டப்பட மாட்டாது. மாணவர்களது சலிப்பு நிலை கருத்தில் கொள்ளப்படாது போனால் மாணவர்கள் தமது செயற்பாடுகள் அங்கீகாரத்துக்கு உட்பட்டது என்ற மனவுணர்வைப் பெறுவர்.

ஆசிரியரானவர் வழமையான முறையில் சிந்திப்பவர்களாகவும், பிரபல்யமான நூல்களை தமது மாணவர்களுக்காக வாசிப்பவராகவும் இருப்பர். எனினும் பெரும்பாலான மாணவர்கள் இது தொடர்பான பின்னணியற்றவர்களாக விளங்குதலானது அதனைப் புரிந்துகொள்ளமுடியாத நிலைக்கு அவர்களை இட்டுச் செல்லும் என்பதோடு, வாசிப்பில் குழப்ப நிலையையும் கடின நிலையையும் தோற்றுவிக்கும். இத்தகைய நிலையைத் தவிர்ப்பதற்கு ஆசிரியர் கல்வியை மாற்று வகையில் சிந்திப்பவராக விளங்குதல் அவசிய மாகும். ஆசிரியரானவர் மாணவர்களை ஆக்கத்திறனும் தொழிற்பாட்டுத் திறனும் உடையவர்களாக வளர்த்தெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஆசிரியரானவர் தான் கற்ற கல்விக் கோட்பாடுகள், உளவியல் கோட்பாடுகள், சமூகவியல் கருத்துக்கள் என்பவற்றை பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கக் கூடிய திறனுடையவராக விளங்குவதனூடாக மாணவர்களைத் தன் பக்கம் இழுப்பதற்கு முடிவதோடு அவர்களுடனான நேரான தொடர்புகளையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

## HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE
**வயோதிபரை பராமரிக்கும் தாதிய பயிற்சி நெறி**

பயிற்சி நெறி காலம் : 9 மாதங்கள்
ஆரம்பம் : தை மாதம் 2014

க.பொ.த சாதாரண தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை **திருச்சிலுவை சுக நிலையம், இல.767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும். முதலில் விண்ணப்பிக்கும் ஐவருக்கு சலுகைகள் வழங்கப்படும்.

**பணிப்பாளர்,**
**தொ.பே.இல: 021 300 1102**
**077 427 0120**

(41714)
(10)

## புதிய மாணவரை இணைத்தல்

தென்மராட்சி, டிசெ.30

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் ஆறாம் தரம்-6 வகுப்புக்களில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான பதிவுகள் இன்று திங்கட் கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம் பெறும். வகுப்புக்களில் இணைவதற்கு விண்ணப்பித்த மாணவர்களை பிறப்புச் சான்றிதழ் மற்றும் விடுகைப் பத்திரம் ஆகிய ஆவணங்களுடன் வருகை தருமாறு அதிபர் த.அம்பலவாணர் அறிவித்துள்ளார். (ந-9)

## நடமாடும் சேவைக்கு வேண்டுகோள்

முல்லைத்தீவு, டிசெ.30

முல்லை மாவட்டத்திலுள்ள உள்ளூர் கிராமங்களில் நடமாடும் மருத்துவ சேவைகளை நடத்துமாறு மக்கள் கேட்டுள்ளனர். ஏற்கனவே மருத்துவரும் வடமாகாண சபை உறுப்பினருமான சி.சிவமோகனின் ஏற்பாட்டில் முத்துஐயன்கட்டிலும் கற்சிலைமடுவிலும் நடமாடும் மருத்துவ சேவைகள் இடம்பெற்றுள்ளன. இதனால் பெருமளவு மக்கள் பயனடைந்துள்ளனர். தற்போது மழை காலம் என்பதால் நுளம்புகள் பெருகிக் காணப்படுகின்றன. இதனால் நோய்த் தாக்கங்களுக்கு மக்கள் உள்ளாகி வருகின்றனர்.

நுளம்பு வலைகள் இல்லாத நிலையில் தற்காலிக வீடு களில் வசிக்கும் மக்கள் அல்லல்களைஎதிர்கொண்டு வருகின்றனர்.

நுளம்பு வலைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாவது பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் தெரிவித்தனர். (க-500)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை பதவி வெற்றிடம்

**பதவி-கணினித்தட்டெழுத்தாளர் 305 /16**
**அடிப்படைச் சம்பளம் :** 9200-70x10-75x10-10650
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய உரிய படிகள் வழங்கப்படும்)
**ஏனைய கொடுப்பனவுகள் -** ஊழியர் சேமநிதி, நம்பிக்கை பொறுப்புநிதி, பணிக்கொடை, மேலதிக வேலை நேர சம்பளம் மற்றும் சட்டரீதியான லீவுகள் வழங்கப்படும்.
**கல்வித் தகைமை:**
கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத் திட்டத்தில் கணினி தட்டெழுத்து (பக்க வடிவமைப்பு) பதவியில் 03 ஆண்டுகால அனுபவம்

அல்லது

கூட்டுறவு ஊழியர் சாதாரண/க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம்/ எண்கணிதம், தமிழ்/சிங்களம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியும் அச்சகத்தில் கணினி தட்டெழுத்தாளர் (பக்கவடிவமைப்பு) பதவியில் ஒரு வருடத்துக்கு குறையாத அனுபவம்.
அச்சகத்தில் பக்கவடிவமைப்பு வேலையில் போதிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தேர்வின் போது செயல்முறைப் பரீட்சை நடத்தப்படும்.
**வயதெல்லை :** 18-45

**பதவி-கல்வி விரிவாக்கல் அலுவலர் தரம்** 201/05
**அடிப்படைச் சம்பளம் :** 12450-190x10-210x10-16450
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய உரிய படிகள் வழங்கப்படும்)
**கல்வித்தகைமை:**
அ. கூட்டுறவு ஊழியர் 06ஆவது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 07ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவகமொன்றில் கற்பித்தல் துறையில் 10 ஆண்டுகால அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தர தராதரப்பத்திரம் / க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் கற்பித்தல் துறையில் 12 ஆண்டுகால அனுபவம்.
(கணினித் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விரிவுரை, பயிற்சிகள் நடத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.)
வயதெல்லை : 30-55 (கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல)

**பதவி : பத்திரிகை ஆசிரியர்**
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் வெளியிடப்படும் ஐக்கிய தீபம் பத்திரிகைக்கு ஆசிரியர் தேவை. பத்திரிகைத்துறை அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. கூட்டுறவுத் துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
வயதெல்லை ஏற்புடையதல்ல
விண்ணப்ப முடிவுத் திகதி - 18.01.2014
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி : **செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, வீரசிங்கம் கட்டடத்தொகுதி, 2ஆம் மாடி இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.** விண்ணப்பத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20/= செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும்.

(சி/10809) (10) **செயலாளர்**

CEYLON THEATRES
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
**MAJESTIC CINEPLEX AT**
**Cargills SQUARE யாழ்ப்பாணம்**
**(Opposite Jaffna Teaching Hospital)**
**10.30am, 2.30pm, 6.30pm**
குடும்பத்தோடு பார்க்கவேண்டிய யதார்த்த த்ரில்லர்
CEL வெளியீடு JSK FILM CORPORATION J. SATISH KUMAR Presents
மதயானைக் கூட்டம்
விக்ரம் சுகுமாரன் (U)
www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

CHEMISTRY CENTRE
1. 287, பலாலி வீதி, கந்தர்மடம்.
2. 33, அராலி வீதி, ஓட்டுமடம் சந்தி அருகில்
**A/L CHEMISTRY DAY CLASS**
பிரிவு I Tue - Fri 11.15 - 2.00p.m
பிரிவு II Tue - Fri 6 - 8p.m
General, Basic உட்பட சகல அலகுகளின் கடந்த கால, மாதிரி வினாக்கள் 25இற்கு மேற்பட்ட கருத்தரங்குகளை உள்ளடக்கியது.
**ஆரம்பம் : 01.01.2014 புதன்கிழமை**
A/L 2014 Physical Chemistry | A/L 2015 Inorganic சக்தியியல் | A/L 2016 General Chemistry
By : அன்பு
Group Classகட்கு தொடர்பு : 077 434 1393

### வகுப்புக்கள்
A/L இரசாயனவியல் வகுப்புக்கள் யாழ் பிரபல பாடசாலையின் பட்டதாரி ஆசிரியரினால் தனியாகவோ, குழுவாகவோ உங்கள் இடங்களுக்கும் வந்த கற்பிக்கப்படும். (41685)(10)
தொடர்பு: **S.S. Sarma 077 743 9475**

### காணி விற்பனைக்கு
கரந்தன் சந்திக்கு முன்பாக இராச வீதியில் ஆறு (06) பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**077 118 5263, 077 625 8805** (41757)(10)

### PHYSICS AND CHEMISTRY INDIVIDUAL OR GROUP CLASSES
A/L 2016 க.பொ.த உயர்தரத்திற்கான இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் பாடங்கள் வீடுகளுக்கு வந்து குழுவாகவோ அல்லது தனியாகவோ கற்பிக்கப்படும். (41682)(4.8.3)
தொடர்புக்கு:077 454 3229

### காணி விற்பனைக்கு
கரந்தன் சந்திக்கு அண்மித்ததாக ஊரெழு றோட்டில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**077 118 5263, 077 625 8805** (41758)(10)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி
## அமரர் யோக்கியசிங்கம் சுதர்சன்



மலர்வு : 15.12.1976
உதிர்வு : 30.12.2008

ஆண்டுகள் ஐந்து
ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும்
இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத் பந்தமும்
நீங்காத நினைவுகளும்
அலை கொண்டு
போனாலும்
அண்ணா எங்களோடுதான்
வாழ்ந்திடுவாய்
வருடங்கள் பலவானாலும்,

என்றும் நினைவுடன்:
அன்பின் தங்கை.
4 ஆ[illegible] கட்டை,
ஆனைக்கோ[illegible]டை.

## மரண அறிவித்தல்
### திருமதி சின்னத்தங்கம் பொன்னையா



எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் முதலாம் மைல் வீதி, கிராம்புவில், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சின்னத்தங்கம் 27.12.2013 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சீதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை பொன்னையாவின் அன்பு மனைவியும், செல்லம்மா, சின்னத்தம்பி, வைரமுத்து, தம்பிஐயா, துரைராசா, இந்தி ராணி, செல்வராசா (சுவிஸ்), யோகலிங்கம் (ஜேர்மனி), பராசக்தி (லண்டன்), ஆனந்தராசா (சுவிஸ்), அருளானந்தம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரி யைகள் இன்று (30.12.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

முதலாம் மைல் வீதி,
கிராம்புவில்,
சாவகச்சேரி. (33058)(10)

**தொடர்புகளுக்கு:**
**077 5231657, 021 7904616**

**மேடம்**: நண்பரிடம் கலை ரசனையுடன் பேசுவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். உற்பத்தி, விற்பனை இலக்கு குறித்த காலத்தில் பூர்த்தியாகும்.

**இடபம்**: எதிரியால் உருவாக்கப்பட்ட சிரமம் செயலிழந்து போகும். புதிதாக வருகிற பணியைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**மிதுனம்**: சுயகௌரவத்துக்குக் குறை எதுவும் வராமல் நடந்து கொள்வது அவசியமாகும். தொழிலில் உருவாகிற இடையூறை உடனடியாகச் சரிசெய்வது நல்லது. அதிக பயன் தராத பொருளை வாங்கவேண்டாம்.

**கடகம்**: நண்பரிடம் எதிர்பார்த்த உதவி குறைந்த அளவில் கிடைக்கும். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய புதிய நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம். அதிக விலையுள்ள பொருள்களைக் கவனத்துடன் பயன்படுத்தவும்.

**சிங்கம்**: நீண்டநாள் திட்டமிட்ட செயல் ஒன்றை நடைமுறைக்கு கொண்டு வருவீர்கள். நண்பரின் ஆதரவு கிடைக்கும். சராசரி பணவரவுடன், நிலுவைப்பணமும் கிடைக்கும்.

**கன்னி**: நண்பர் கர்வம் நிறைந்த குணத்துடன் தேவையற்ற ஆலோசனை சொல்வார். சுயமான செயல் மட்டுமே உங்களுக்கு நற்பலனை பெற்றுத் தரும். புதிய உறவினர்களால் பணச்செலவு ஏற்படலாம்.

**துலாம்**: உறவினர் தந்த உதவிக்கு மறுஉபகாரம் செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய பரிமாணம் ஏற்படும். பணவரவு கிட்டும். நீண்டநாள் காணாமல் தேடிய பொருள் கைவந்து சேரும்.

**விருச்சிகம்**: திறமையுடன் செயற்படுவதால் மட்டுமே திட்டமிட்ட பணி நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**தனுசு**: அடுத்துவரும் பணிகள் சிறப்பாக நிறைவேற முன்னேற்பாடு செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மகரம்**: உங்கள் செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தாமதமான பணியை உத்வேகமுடன் நிறைவேற்றுவீர்கள். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டாகும்.

**கும்பம்**: குணம் கெட்ட ஒருவருக்கு உதவி செய்து பின்னர் மனவருத்தம் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர, கூடுதல் பணிபுரிவது அவசியம். சிக்கனத்தைக் கடைப்பிடியுங்கள்.

**மீனம்**: உங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகலாம். உண்மை, நேர்மை குணம் பின்பற்றுவது நற்பயன் தரும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

# ஈசுவரனும் பரப்பிரம்மமும்




### விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

( சுவாமி விவேகானந்தர் ஐரோப்பாவில் இருந்த போது, 'வேதாந்தக் கொள்கைப்படி ஈசுவரனின் நிலை எது?' என்னும் கேள்வி எழுந்தது. அதற்கு சுவாமிஜி பின்வருமாறு விளக்கம் தந்தார்.)

மனித உடல், செல் (Cell) என்னும் நுண் பொருள்களால் ஆக்கப் பெற்றது. இந்த செல் ஒவ்வொன்றும் ஒரு தனிப் பொருளே. இந்தத் தனிப் பொருள்களின் சேர்க்கையே உடல் என்னும் ஒரு பொருளாகக் காட்சி தருகிறது. அதுபோல, கோடிக் கணக்கான உயிர்களின் சேர்க்கையே ஈசுவரன். சமஷ்டி அல்லது சேர்க்கை, இதுவே ஈசுவரன்; வியஷ்டி அல்லது பிரித்தல், இதுவே உயிர். உடலின் தன்மை செல் என்னும் நுண்பொருளைப் பொறுத்தது. அதேபோல ஈசுவரனின் தன்மை உயிர்களைப் பொறுத்தது. எனவே உயிரும் ஈசுவரனும் ஒன்றுக்கொன்று ஆதாரமானவை. ஒன்று இருக்குமாயின் மற்றொன்றும் இருந்தே தீரவேண்டும். மேலும் இந்தப் பூமியைத் தவிர மற்ற உயிர் பூமிகளில் எல்லாம் நன்மையே மிகுந்துள்ளது. எனவே ஈசுவரன் நன்மையின் உருவம் என்று கூறலாம். எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன் என்பவற்றுக்கு விளக்கம் தேவையில்லை. உயிர்களின் சேர்க்கை என்ற ஒன்றே இதை விளக்கும்.

பரப்பிரம்மம் என்பது இவையிரண்டுக்கும் அப்பாற்பட்டது. இது பல பொருள்களின் சேர்க்கை அல்ல. இதுவே தனிப்பொருள்; கரு முதல் கடவுள் வரை ஊடுருவி நிற்பது. இது இல்லையெனில் எதுவும் இல்லை. எது உண்மையோ, அதுவே பிரம்மம். நானே பிரம்மம் என்று நினைக்கும்போது நான் மட்டுமே இருக்கிறேன். மற்றவர்களுக்கும் இப்படியே. எனவே ஒவ்வொருவரும் அந்தப் பிரம்மமாகிய தத்துவத்தின் நிறைவே.

# உடற் பருமனைக் குறைக்க நின்று கொண்டே படிக்கும் வகுப்பு ஆஸியில் அறிமுகம்




மாணவர்களின் உடற் பருமன் உள்ளிட்ட ஆரோக்கியச் சீர்கேட்டைக் குறைக்கும் வகையில் நின்று கொண்டே படிப்பதற்கான வகுப்பறை ஒன்று உலகிலேயே முதன்முறையாக ஆஸ்திரேலியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது இன்றைய மாணவர்களின் உடல் உழைப்பும் குறைவு. இணையம், தொலைக்காட்சி என அவர்களது பெரும்பான்மையான நேரங்கள் அமர்ந்து கொண்டே தான் கழிகின்றன. ஆசிரியர்கள் பாடம் நடத்தும்போது மாணவர்கள் மணிக்கணக்கில் இருக்கையில் அமர்ந்தே இருப்பதால் உடல் குண்டாகி, உடல் பருமனால் அவதிப்படும் நிலைமை, நீரிழிவு மற்றும் இதயநோய் முதலியவை உண்டாவதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவித்தது. எனவே, இதற்குத் தீர்வு காணும் வகையில் நின்று கொண்டே படிக்கும் வகுப்பறை ஒன்று ஆஸ்திரேலியாவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்புப் பரிசோதனை, மான்ட் அல்பர்ட் தொடக்கப் பள்ளியின் 6 ஆம் வகுப்பு அறையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த டெஸ்ட் அமைக்கப்பட்டதிலிருந்து அதிக மாணவர்கள் நின்று கொண்டே பாடம் கேட்கின்றனர். மாணவர்கள் இவ்வாறு நின்றபடி கல்வி கற்பதால் அவர்களது சுகாதாரம், உடல்தகுதி, படிப்பாற்றல், நினைவுத் திறன் மேம்படுகிறதா என்பதை கணக்கிட விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கு முந்தைய ஆய்வுகள் மூலம், பள்ளிக் கூடங்களில் தினமும் 2/ 3 பங்கு காலம் அமர்ந்தபடியே இருந்தால் நீரிழிவு நோய், இதய நோய், உடல் பருமனாதல் போன்ற பிரச்சினைகள் வருகிறன்றன ஏற்படுகின்றன என்பது கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**நாளை**

மார்கழி-16
செவ்வாய்க்கிழமை 31.12.2013
திதி: சதுர்த்தசி மு.இ.07.50 வரை
நட்சத்திரம்:
கேட்டை பி.ப.01.16 வரை
சுபநேரம்:
10.59- 12.29 வரை
இராகுகாலம்:03.29 -04.59 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 9 | 7 | 5 | 4 | 2 | 3 | 6 |
| 7 | 6 | 3 | 9 | 8 | 2 | 5 | 4 | 1 |
| 2 | 5 | 4 | 6 | 1 | 3 | 7 | 8 | 9 |
| 9 | 4 | 7 | 8 | 3 | 6 | 1 | 5 | 2 |
| 6 | 3 | 1 | 5 | 2 | 7 | 4 | 9 | 8 |
| 5 | 2 | 8 | 1 | 4 | 9 | 6 | 7 | 3 |
| 3 | 7 | 6 | 2 | 9 | 5 | 8 | 1 | 4 |
| 4 | 8 | 5 | 3 | 6 | 1 | 9 | 2 | 7 |
| 1 | 9 | 2 | 4 | 7 | 8 | 3 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 5 | 1 | 3 | 6 | 8 | 2 | 9 |
| 3 | 8 | 6 | 4 | 2 | 9 | 1 | 7 | 5 |
| 9 | 2 | 1 | 7 | 5 | 8 | 6 | 4 | 3 |
| 1 | 6 | 8 | 5 | 4 | 3 | 7 | 9 | 2 |
| 5 | 9 | 7 | 8 | 6 | 2 | 4 | 3 | 1 |
| 2 | 3 | 4 | 9 | 1 | 7 | 5 | 8 | 6 |
| 6 | 1 | 9 | 3 | 7 | 4 | 2 | 5 | 8 |
| 4 | 5 | 3 | 2 | 8 | 1 | 9 | 6 | 7 |
| 8 | 7 | 2 | 6 | 9 | 5 | 3 | 1 | 4 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

விசுவமடுவில்.....

மெகா இங்கிலிஸ் அக்கடமி

(M.E.C.A English Academy)

- Grammar & Spoken (3 Months)
- O/L, A/L எழுதிய மாணவர்களுக்கு ஆரம்பம்

நேரம் : 7.00 - 10.00a.m
3.00 - 5.00p.m
7.00 - 9.00p.m

01.01.2014 Batch 1

- திங்கள் தொடக்கம் வெள்ளி வரை வார நாள்களிலும்
- சனி, ஞாயிறு வார இறுதி நாள்களிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன.
- தரம் 03-10 வரையான மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடு செல்வோர் அனைவருக்கும் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: (41726) (7.6.3)

ஆசிரியர் : S.K. மதி - 077 435 8167

## புறொயிலர் விற்பனைக்கு

கிளிநொச்சி&யாழ்.நகரில் தரமான புறொயிலர், முட்டை, ஊர்க் குஞ்சுகள் எம்மிடம் வேண்டிய எண்ணிக்கையில் ஓடருக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : எம்மிடம் கொள்வனவு செய்யும் புறொயிலர் குஞ்சுகள் குறித்த எடைக்குப் பின்பு நாமே குறிப்பிட்ட விகிதத்தில் மீள்கொள்வனவு செய்வோம் என்பதனைத் தெரிவிக்கின்றோம்.

T.P. : 077 349 1646 (43031) (7.6.3)

## மரண அறிவித்தல்

### கந்தப்பிள்ளை சின்னத்தங்கச்சி

(கிளானை, கொல்லங்கலட்டி)



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கந்தப்பிள்ளை சின்னத்தங்கச்சி 29.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசலக்சுமி, இராசரத்தினம் மற்றும் செல்லமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பரயோகலிங்கம் மற்றும் சத்யநாதன் ஆகியோரின் மைத்துனியும் உதயரஞ்சினி(சந்திரா), உதயகுமாரன் (கிளி), உதயகுமாரி (குஞ்சு), உதயனன் (கண்ணன்-லண்டன்), உதயகாந்தன் (மாம்பழம்-சவுதி), உதயவேள்(ரகு) ஆகியோரின் சிறியதாயும், லதாமினி, மயூரன் ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2013) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் மடத்தடி கொல்லங்கலட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி, கொல்லங்கலட்டி.
077 044 9266

தகவல்:
பெறாமகன் பரயோகலிங்கர் உதயகுமாரன் (கிளி)

(41824)(3.6.4)

## உ
## தசாக க்ருஹயக்ஞ அழைப்பு

22.12.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர்

### ப்ரம்மஸ்ரீ கு.மங்களேஸ்வர சர்மா



அவர்களின் தசாகம் நாளை (31.12.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். 03.01.2014 வெள்ளிக்கிழமை ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இடம்பெறும். மேற்படி அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் அன்பர்கள், நண்பர்கள், உற்றார்,உறவினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

அமரர் ப்ரம்மஸ்ரீ கு.மங்களேஸ்வர சர்மாவின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், உதவி ஒத்தாசை நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் தொடர்ந்து நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்பவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

224/06, பத்திரகாளி
அம்மன் கோவில் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(41821)(10.6.3)

## ஒன்று கூடல்

தென்மராட்சி,டிசெ.30

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நாளை செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும். நகரசபையின் செயலாளரும் சங்கத்தின் தலைவருமான கா.சண்முகதாஸன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

சாவகச்சேரி நகரசபை அலுவலகம், மீசாலை, நுணாவில் சாவகச்சேரி ஆகிய பொது நூலகங்கள், பொதுச் சந்தை ஆகியவை ஒன்றிணைந்து இந்த ஒன்றுகூடல் நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

◆ ◆ ◆

யாழ். பொது நூலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நலன்புரி சங்கத் தலைவர் திருமதி க.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக மாநகர சபை ஆணையாளர் செ. பிரணவநாதனும் கௌரவ விருந்தினராக பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரனும் கலந்து கொள்வர். (ந-135)

## கற்சிலைமடு அ.த.க. பாடசாலையின் பொன்விழா

கற்சிலை மடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 80 ஆவது ஆண்டு பொன் விழா எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறுமென பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா தெரிவித்தார். கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தப் பாடசாலை 1934 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு குறைந்தளவு மாணவர்களுடன் 5 ஆம் வகுப்பு வரை இயங்கி வந்தது. தொடர்ந்து இந்தப் பாடசாலை வளர்ச்சி அடைந்து மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் பல சாதனைகளைப் படைத்து பாடசாலைக்குப் பெருமையை தேடித் தந்தனர். பின்னர் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டு தற்போது க.பொ.த. உயர் தரம் வரை வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. தற்போது மாடிக்கட்டடங்களும் விஞ்ஞான ஆய்வு கூட வசதிகளும் ஒருங்கே அமைந்து இந்தப் பாடசாலை முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறந்த தொரு பாடசாலையாகத் திகழ்கின்றது. இந்தப் பாடசாலையின் பொன்விழா பெற்றோர்கள் ஆசிரியர்களின் பங்களிப்புடன் சிறப்பாக இடம் பெறவுள்ளது- என்றார். (க-500)

### மின்சாரம் கிடைக்காததால் விசனம்

பரந்தன் கோரக்கன் கட்டு கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருவதாக அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தின் இரண்டு புறமும் உள்ள பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கிராமத்தின் ஊடாக மின்சாரவயர்கள்சென்று அருகிலுள்ள பகுதிகளுக்குமின்சாரஇணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் தமது கிராமம் புறக்கணிக்கப்படுவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் தமது கிராமம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும், செல்வாக்கும் அரசியல் ஆதரவும் உள்ள சிலர் இத்தகைய கிராமங்களின் அபிவிருத்திகளைத் தடுப்பதாகவும் இவர்கள் குறை கூறுகின்றனர்.

தமது கிராமத்திலும் பாடசாலை செல்கின்ற மாணவர்கள் உள்ளதாகவும்தற்போதுதமது பிள்ளைகள்குப்பிவிளக்குகளின் உதவியுடன் படித்து வருவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். (க-426)

## மைதானம் இல்லாத கிராமம்

முல்லைத்தீவு, டிசெ.30

கற்சிலைமடு கிராமத்தில் பொது விளையாட்டு மைதானம் இல்லாததால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிறார்கள் விளையாட்டுக்களில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகின்றது.பொது விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு காணி இல்லாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எவராவது காணிகளை வழங்குவதற்கு முன்வந்தால் விளையாட்டு மைதானத்தை அமைக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. மாஞ்சோலை மருத்துவமனை ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணிகளிலேயே இயங்கி வருகின்றது. இதனால் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ வசதியை இலகுவாகப் பெற முடிகின்றது. எனவே கற்சிலைமடுவில் விளையாட்டுக் கழகத்தை அமைப்பதற்கான காணியையும் அன்பளிப்பாக வழங்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

### தரம் 5 வகுப்பு

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு வீடுகளுக்கு வந்து பிரத்தியேகமாக பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படும். யாழ்.நகர், நல்லூர், கொக்குவில், இணுவில், சுன்னாகம், மல்லாகம் ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

T.P. : 077 248 7080 (41819) (7.6.3)

## துயர் பகிர்கின்றோம்



இலங்கைத் திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி ம. றாஜினி அவர்களின் பாசமிகு தந்தை


**பிரம்மஸ்ரீ கு.மங்களேஸ்வரசர்மா**

அவர்களின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

பட்டமேற் கல்வி டிப்ளோமா (41802) (7.6.3)
2013/2014 B அணியினர் - யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### முத்துக்குமார் நித்தியானந்தா



திருநெல்வேலி,பலாலிவீதி யினைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமார் நித்தியானந்தா 27.12.2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் (S.M.Hard Ware உரிமையாளர்)- சிவகாமசுந்தரி தம்பதி யரின் மகனும், செல்லத்துரை- மனோன் மணி தம்பதியினரின் மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், ஜனனி, தினேஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபானந்தா, யோகானந்தா, பிறேமானந்தா, ஸ்ரீகாயத்திரி, உருத் திரானந்தா, கோவிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மு.உருத்திரானந்தா
இல. 802, பலாலி வீதி,
திருநெல்வேலி.
தொடர்பு : 021 222 6856
075 039 5005

தகவல் :
மனைவி,
(41816)(7.6.3) பிள்ளைகள்.

### கணபதிப்பிள்ளை செல்லையா



4 ஆம் வட்டாரம், மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்லையா நேற்று (2013.12.29) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகபூரணியின் அன்புக் கணவரும், சிவக்கொழுந்து, பாக் கியம், காலஞ்சென்றவர் களான இராசரத்தினம், நாகேஸ்வரி மற்றும் இராசம்மா ஆகி யோரின் அன்புச் சகோதரரும், செல்லப்பாக்கியம், காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் மங்களேஸ்வரன், செல்வராணி, சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்து னருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம்,
மண்கும்பான்.

தகவல்:
குடும்பத்தினர்.

## யானை தாக்கி ஒருவர் சாவு


திருகோணமலை,டிசெ.30
திருகோணமலை-கோமரங்கடவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்புறுகஸ்வெவ பகுதியில் காட்டு யானை தாக்கி மூன்று பிள்ளைகளின்தந்தையொருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த எம். ஆரியதாச, பம்புறுகஸ்வெவ பகுதியைச் சேர்ந்தவராவார்.

இவர் திருகோணமலை -புத்தளம் வீதி புனரமைப்புப் பணியில் ஊழியராகக் கடமையாற்றி வந்தவர் எனவும், இரவு எட்டு மணியளவில் சைக்கிளில் வீட்டுக்குச் செல்லும் வழியில் குபுக்வெவ பகுதியிலேயே இவரை யானை தாக்கியதாகவும் பொலிஸாரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டுயானைகளின் தொல்லை அதிகரிப்பதாக உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தும் அவர்கள் எதுவித நடவடிக் கையும் எடுக்கவில்லை என்றும் அந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த மாதத்தில் புலிக்கண்டி



குளம் பகுதியில் ஒருவரை யானை தாக்கியதாகவும்தாவுல்வெயில் ஓட்டோ ஒன்றில் பயணித்த மூன்று பேரை தாக்கியதாகவும் வில்பனாகுளம் பகுதியில் பொலிஸார் இரு வரை யானை தாக்கியதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர். (வ)




மட்டக்களப்பு, ஓட்டமாவடி- காவத்தமுனைக் கிராமத்தில் மலைப்பாம்பு ஒன்று உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளது. சுமார் ஏழு அடி நீளமுள்ள மேற்படி பாம்பானது, ஆட்டுப்பட்டியொன்றினுள் நுழைந்து அங்கிருந்த ஆடொன்றை விழுங்கி கொண்டிருந்த நிலையில் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளது.
பட்டி உரிமையாளர்கள் பாம்பிடமிருந்து ஆட்டை மீட்டபோதும் ஆடு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மீன் உற்பத்தியில் மட்டு. மாவட்டம் சாதனை

மட்டக்களப்பு. டிசெ.30
மட்டக்களப்பு மாவட்டம் தேசிய மீன் உற்பத்தியில் 9 வீதம் பங்களிப்புச் செய்துள்ளதுடன் சென்ற வருடத்தை விடவும் மாவட்ட மீன் உற்பத்தி 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் மட்டக்களப்பு கடல்தொழில் நீரியல் வள உதவிப்பணிப்பாளர் ரீ.ஜோர்ஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:--

இந்த வருடத்தின் ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் மாதாந்தம் சராரியாக 4ஆயிரம் மெற்றிக்



தொன் மீன்கள் பிடிபட்டுள்ளன. இதுவரை 45ஆயிரம் மெற்றிக்தொன் மீன் உற்பத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் 23672 மீன்பிடிக் குடும்பங்களைச் சேர்ந்த 25159 பேர் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இந்த மீன்பிடியாளர்களால் 86372 பேர் நேரடிப் பயனாளர்களாக உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், 1223 வெளியிணை இயந்திரப் படகுகள், 360 ஆழ்கடல் இயந்திரப் படகுகளும், 70 ஒரு நாள் இயந்திரப் படகுகளும் அடங்கலாக 1693 இயந்திரப்படகுகள் மீன்பி டியில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது என்றார். (வ)

## இ.போ.ச. அரைச் சொகுசு பஸ்ஸை பயன்படுத்துக

### சம்மாந்துறை மக்களுக்கு சாலை முகாமையாளர் வேண்டுகோள்

மட்டக்களப்பு,டிசெ.30
சம்மாந்துறை இ.போ.ச. சாலைக்குச் சொந்தமான கொழும்பு-சம்மாந்துறைக்கான இ.போ.ச வின் இரவு நேர அரைச் சொகுசு பஸ் சேவைக்கு சாதாரண கட்டணமாக ரூபா 450மட்டுமே அறவிடப்படுகின்றது. எனவே இந்தச் சேவையை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று சம்மாந்துறை பஸ் சாலை முகாமையாளர் யூசுப் லெப்பை முஹமட் தாஸிம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:-


கொழும்புக்கும் சம்மாந்துறைக்கும் இடையில் மிகக் குறுகிய நேரத்தில் பயணம் செய்யக் கூடிய வாறு இரவுநேர அரைச் சொகுசு பஸ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தினமும் இரவு 8 மணிக்கு சம்மாந்துறை பஸ் சாலையில் இருந்து புறப்பட்டு அதிகாலை 4.15 மணிக்கு கொழும்பு மத்திய பஸ் தரிப்பு நிலையத்தைச் சென்றடையும்.

அதேபோன்று கொழும்பு மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து இரவு 8.30 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 5.30 மணிக்கு சம்மாந்துறையை அடையும்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு, காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை ஆகிய இடங்களுக்கு செல்லும் பிரயாணிகளும் சம்மாந்துறையிலிருந்து கொழும்பு, குருநாகல், நிட்டம்புவ போன்ற இடங்களுக்குச்செல்லும்பிரயாணிகளும் 067 226 0281 மற்றும் 077 105 8320 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு ஆசனங்களை முன் பதிவு செய்ய முடியும்-என்று தெரிவித்தார். (வ-10)

## நவரெத்ன மண்டபம் மூடிய நிலையில்



திருகோணமலை,டிசெ.30
திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் நகரத்தில் உள்ள நவரெத்ன மண்டபம் கடந்த காலங்களில் சமயப் பணி மற்றும் சமூகப்பணியில் சிறந்து விளங்கியது. திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு சொந்தமான இந்தக் கட்டடத்தில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் கடந்த காலங் களில் இடம் பெற்ற வந்தன.,

ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக இந்த அமைப்பின் செயற்பாடு மந்தமாக உள்ளமையால் இந்தக்கட்டடம் எவ்வித செயற்பாடுகளும் இடம் பெறாது மூடிய நிலையில் உள்ளது.

மக்களுக்கு பயன் தரக்கூடிய பல்வேறு பொதுச் சொத்துக்கள் இவ்வாறு பயன்படுத்தப்படாமல் முடக்கப்பட்ட நிலையில் இருப்பதனால் இந்தப்பகுதி மக்கள் மட்டுமல்லாது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முழு இந்துக்களும் விசனமடைந்துள்ளனர். (வ)

# கல்முனை 'பட்ஜெட்' விவகாரம்; தனித்துவமாகப் பேச வேண்டியது

### *திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தெரிவிப்பு*

கல்முனை,டிசெ.30
கல்முனை மாநகர சபை வரவு- செலவுத் திட்ட விடயம் அறையில் பேசப்பட்டிருக்க வேண்டும். இந்த விடயம் வெளியே வந்திருக்கக் கூடாது என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனைத் தொகுதி அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளருமான எச். எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் தான் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

கல்முனையில் இன ரீதியான குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கு பொதுபல சேனா போன்ற சக்திகள் திட்டமிட்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துள்ள இந்தவேளையில் அவர்களுக்கு தீனி போடுவதாகவே இந்த விடயம் அமைந்திருந்தது.

முரண்பாடுகள் இருந்தால் அதனைப் பேசித் தீர்வு கண்டிருக்க வேண்டும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு சிலரின் விருப்பு வெறுப்புக்கான கட்சி அல்ல; அது முழு முஸ்லிம் சமூகத்துக்கும் உரித்தானது.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலை கடந்த காலத்தில் கல்முனை மாநகர சபைக்கு ஏற்படவில்லை. நாம் அவதானமாக செயற்பட வேண்டியுள் ளது.

சம்பந்தப்பட்டவர்களை அணுகி கட்சி தலைவர் ரவூப் ஹக்கீமின் வழிகாட்டலுடன் இந்த பிரச்சினைக்கு முடிவு கட்டப்படும் என்றார். (வ)

# பெரியபுளியம்குளக் காணி பகிரப்படாமை ஏன்?

### *காடு வெட்டி துப்புரவு செய்த முஸ்லிம் விவசாயிகள் கேள்வி*

திருகோணமலை,டிசெ.30
திருகோணமலை - ரொட்டவெவயில் கமநெகும, மகநெகும வேலைத் திட்டத்தின் கீழ் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட பெரிய புளியம் குளத்துக்கு கீழ் உள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் இன்னமும் பகிர்ந்தளிக்கப்படவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த போர்க் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்டு வந்த இவ் விவசாய காணிகளில் இருந்து செல்லுமாறு அரச படையினரே விவசாயிகளுக்கு கூறியதாகவும் வியர்வை சிந்தி, பசி பட்டினியுடன் காட்டை வெட்டி துப்புரவு செய்த இந்தக் காணிகளை ஏன் தமக்குப் பகிர்ந்தளிப்பதில் தாமதம் ஏற்படுகின்றது எனவும் விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.



கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பெரிய புளியம்குளம்-சின்னப் புளியம் குளம் ஆகிய குளங்கள் முப்பத்துஆறு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டதுடன் இரண்டு கிலோ மீற்றர் நீளமுள்ள விவசாய வீதியும் பதினேழு இலட்சம் ரூபா செலவில் புன ரமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் விவசாய சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்தக் குளம் புனரமைமைப்புச் செய்யப்பட்டு ஆறு வருடங்களுக்கு முன்னர் உடைப் பெடுத்ததாகவும் அந்தக் கிராம விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது இந்தக் காணிப் பகுதிக்குச் செல்லும் விவசாயிகளுக்கு எதிராக வனவள அதிகாரிகள் வழக்குத் தாக்கல் செய்வதாகவும், அவை வனப்பகுதிக்குச் சொந்தமான காணி எனவும் கூறு கின்றனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அரசியல்வாதிகளிடம் இது குறித்தும் தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே அந்தக் குளத்துக்குச் சொந்தமான முஸ்லிம்களுடைய காணிகளை பகிர்ந்தளிக்க வேண்டும் என அந்தக் கிராம விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ)

# மரண அறிவித்தல்



## திருமதி கமலம் (காலியாள்) தர்மலிங்கம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், காரைநகர் கோவளத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி கமலம் (காலியாள்) தர்மலிங்கம் நேற்று முன்தினம் (28.12.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதியரின் அன்புமகளும் வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் (கனடா) காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, சரஸ்வதி (காலி), ராசலெட்சுமி (காரைநகர்), செல்வராசா (கொழும்பு), சற்குணராசா (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் லோகேஸ்வரி, இந்தி ராணி, றனதேவா, அருள்ராசா, பாலாமணி, செல்வ மலர் ஆகியோரின் அன்பு மாமியும் பாதுஷா, ஜெனனி, ராகவன், ரவீந்திரகுமார், கமலராணி, ரணசிங்க, பத்மநந்தினி, ஜெயந்தி, கருணதிலக, சுஜித்திரா, துஸ்யந்தன் நிவேதிகா, மகேஸ்வரன், சியாமளா, சிவரூபி, சிவப்பிரியா, பிரசாந்தன், சிவதர்சினி, மோனிஷா, கிதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருஷ்ணவி, டிலக்ஷன், யதுர்சிகா, பாரதி, பார்கவி, ஜனகன், தக்ஷன், தக்ஷ்வினி, கைலாஷ், ரதின்ஷா, சதீஸ், சனுமி, சிஜன்சா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2013) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
தர்மலிங்கம் (கணவர்)
குடும்பத்தினர்

கோவளம் காரைநகர்.

# இனப்படுகொலைக்கு தக்க சான்றே திருக்கேதீஸ்வர மனிதப் புதைகுழி

## ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.30

"மன்னார், திருக்கேதீஸ்வரப் பகுதியில் காணப்படும் மாபெரும் மனிதப் புதைகுழி இலங்கையின் இனப்படு கொலைக்கு தக்க சான்றாகும்" - என்று ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினரும், வீடமைப்புத்துறை தலைவருமான சி.பாஸ்கரா விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

திருக்கேதீஸ்வரம், சமய குரவர்கள் இருவரால் தேவாரம் பாடப்பட்டு இந்துக்களால் பழைமை வாய்ந்த புனித தலமாக மதிக்கப்படும் இடமாகும். இத்தல வளாகத்தில் மனிதப் புதைகுழி காணப்படுவது உலகவாழ் இந்துக்களின் மனதில் வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் செயலுக்கு ஒப்பானது.

இலங்கையில் இனவாதம் தாண்டவமாடுவது உலகறிந்த விடயமாகும். தற்போது மதவாதம் தலைவிரித்தாடுவதும் உலகமறிந்த விடயமேயாகும். திருக்கேதீஸ்வர வளாகத்தில் காணப்படும் மனிதப் புதைகுழி இனப்படு கொலைக்கு தக்கசான்றாக புலப்படுகின்றனது. இந்தப் பாதகச் செயலை எவர், எப்போது செய் திருப்பினும் மன்னிக்க முடியாத குற்றமும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட 1982ஆம் ஆண்டு தயாரித்து பாவனைக்கு விடப்பட்ட 25 சதம், முக்கிய ஒரே தடயமாகக் கருதப்படுகின்றது. அக்காலத்து சூழ்நிலையை நாம் கவனமாக நோக்கவேண்டும்.

கோவில் வளாகம் முழுக்க முழுக்க இராணுவக் கட்டுப்பாட்டிலும் இராணுவத்தின் கண்காணிப்புக்கும் உட்பட்ட பிரதேசமாக கடந்த 1982 ஆம் ஆண்டுக்கு பின்னர் இருந்தமை தரவுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இதனைக் கவனித்துப் பார்க்கும்போதுஇராணுவம்கொலைக் குற்ற வாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய கடமைப் பாட்டை தட்டிக்கழிக்க முடியாதமை புலனாகிறது.

கிருஷாந்தி கொலையை அரசு முதலில் மறுத்தது. உச்ச ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்ட பின்னர் கொலை செய்யப் பட்டவர்களுக்கு சட்டத்தின் உச்ச தண்டனையான தூக்குத் த்ண்டனை வழங்கப்பட்டது. பின்னர் அந்தத் தூக்குத் தண்டனைக் கைதி தனது இறுதி விருப்பமாக கிருஷாந்தி கொலையை விவரமாகத் தெரிவிக்க முன்வந்தபோது அவரது விவரம் தெரியாமல் போனதும்நாமறிந்த உண்மையாகும்.

எனவே, மன்னார் புதைகுழி விடயத்தில் அரசு மேலும் காலத்தைத் தாழ்த்தாமல் - கிருஷாந்தி வழக்குப் போல் நடைபெற இடமளிக்காமல் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி கொலைப்பாதகர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தி உச்ச தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும். அப்போதுதான் மார்ச் மாதம் நடை பெறும் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் தொடர் சிக்கலிலிருந்து அரசு ஓரளவு மீள்வதற்கான சூழ்நிலை ஏற்படும். இல்லையேல், இலங்கைக் கான இன்னல் நிரந்தரமாக மாறிவிடும் - என்றுள்ளது. (ங-சி)

# அதிக அதிகாரத்தை கோருகிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

## சட்ட திருத்த கோரிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, டிசெ.30

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நமக்கு கூடுதல் அதிகாரங்களை பெறுவதற்கான சட்டத் திருத்தம் ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கோரியுள்ளது. இதற்கான பரிந்துரைகள் ஜனாதிபதி உள்ளிட்ட தொடர்புடைய அமைச்சுக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

1996ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்டத்தையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு பின்பற்றி வருகிறது. இதனால் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இது குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹநாமஹேவா கருத்து வெளியிடுகையில்,

மனித உரிமைகள் குறித்து உலகில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக கனடா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரச துறை மட்டுமன்றி தனியார் துறையைச் சார்ந்தவர்களின் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரித்து தீர்த்துவைக்க முடியும். இலங்கையில் அப்படியான நிலைமை இன்னும் இல்லை.

> “1996ஆம் ஆண்டு உருவாக் கப்பட்ட சட்டத்தையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு பின்பற்றி வருகிறது. இதனால் மனித உரிமை மீறல் கள் தொடர்பில் உரிய நடவ டிக்கைகள் எடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

'இப்போதுள்ள சட்டத்தின்படி, நாங்கள் முன்வைக்கும் பரிந்துரை ஒன்று நடைமுறைப் படுத்தப்படாவிட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க மிகவும் நீண்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. அதனால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி கிடைக்காமல் போகின்றது'.

புதிய சட்டத்திருத்தத்தின்படி, மனித உரிமைகள் ஆணைக் குழு முன்வைக்கும் பரிந்துரை ஒன்று நியாயமான காலத்துக்குள்- நியாயமான வகையில் நிறைவேற்றப் படாவிட்டால், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கோ அல்லது மாகாண உயர்நீதி மன்றத்துக்கோ தங்களின் பரிந்துரையை ஒரு சான்றிதழ் போல சமர்ப்பித்து அதனை நீதிமன்ற உத்தரவாக வலுப்படுத்தும் ஏற்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், அந்த உத்தரவை நடைமுறைப்படுத்த அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர்களுக்கு எதிராக 'நீதிமன்ற அவமதிப்பு' குற்றச்சாட்டை சுமத்தமுடியும்.

2013ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப் பகுதிக்குள் சித்திரவதைகள் தொடர்பான 563 முறைப்பாடுகள் ஆணைக் குழுவுக்கு கிடைத்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பொலிஸாருக்கு எதிரானவை.

இந்த சம்பவங்கள் தொடர்பில் விரைவான விசாரணை நடைமுறையின் கீழ் தீர்வு வழங்கவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரம் கோரியுள்ளது.

ஒரு வருடத்துக்கு மேலாக ஆராய்ந்து இந்த சட்டத்திருத்த வரைவை சமர்ப்பித்திருக்கிறோம். இது ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல என் றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மன்னார் புதைகுழி

டும் ஆரம்பமாகின.

மன்னார் நீதிவான், கொழும்பிலிருந்து வந்த விசேட நிபுணர் குழுவினர், மன்னார் பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி ஆகியோர் முன்னிலையில் இந்த மனிதப் புதைகுழி நேற்றுமுன்தினம் தோண்டப்பட்டபோது ஏற்கனவே மீட்கப்பட்ட 11 மனித எச்சங்களின் முழுமையான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அத்துடன் மேலும் பல மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து நேற்று ஞாயிற் றுக்கிழமையிலிருந்து மீண்டும் குறித்த புதைகுழி தோண்டும் நடவடிக்கை இடம்பெறும் என்று அறிவிக் கப்பட்டிருந்தது. எனினும், நேற்று திடீரென்று தோண்டும் பணி இரண் டாவது தடவையாக நிறுத்தப்பட்டது.

புதுவருடத்துக்காகவே புதைகுழியைத் தோண்டும் பணிகள் நிறுத்தப் பட்டன என்றும், எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து குறித்த மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றன.

இதேவேளை, அங்கு தோண்டத் தோண்ட மனித எச்சங்கள் காணப்படு வதால் அது மாபெரும் மனிதப் புதை குழி என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றும், குறித்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்றும் இந்தப் புதைகுழியைத் தோண்டும் பணியில் ஈடுபட் டுள்ள விசேட நிபுணர் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ங-சி)

### மன்னார் புதைகுழியை

வித்ததாவது:-

"போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தால் கடத்தப்பட்டு காணாமற்போன தமிழ் உறவுகளின் எலும்புக்கூடுகளே மன் னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியிலி ருந்து மீட்கப்பட்டிருக்கலாம் என மன் னார் ஆயர் சந்தேகம் வெளியிட்டுள் ளார். அத்துடன், இதுதொடர்பில் சர்வ தேச விசாரணை உடன் தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். அவரின் இந்த வலியுறுத் தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.

மன்னார் ஆயரின் வேண்டுகோளுக்கிணங்க இது தொடர்பில் சர்வதேச விசாரணை உடன் தேவை. ஏனெனில், இந்த மனிதப் புதைகுழி இனப்படுகொலைக்கு ஒரு சான்றாக இருக்கின்றது.

இந்தப் புதைகுழியைத் தோண்டி அதை ஆய்வுசெய்வதற்கு சர்வதேச நிபுணர் குழுவை இலங்கைஅரசு உடன்அழைக்கவேண்டும். அப்போதுதான் உண்மை கண்டறியப்படும். தற்போது புதைகுழியைத் தோண்டும் பணியில் ஈடுபட் டுள்ள உள்நாட்டு நிபுணர் குழுவில் எமக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் அரசின் கருத்துகளுக்கே செவிசாய்ப்பார்கள்.

நத்தார் தினம், புதுவருடம் என்று அடிக்கடி புதைகுழியைத் தோண்டும் பணியை நிறுத்திவைக்கவேண்டிய அவசியம் எதுவும் இல்லை. இவ்வாறு புதைகுழியை தோண்டும் பணிகள் திடீர்திடீரென நிறுத்தப்படுவது எமக்குப் பெரும் சந்தேகத்தை ஏற் படுத்தியுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி போன்று இதனையும் கிடப்பில் போட அரசு முயற்சிக்கக் கூடாது. தனக்குக் கெட்ட பெயர் வந்துவிடும் என்ற அச்சத்தில் மன்னார் புதைகுழியின் உண்மை நிலைவரத்தை அரசு மூடிமறைக்கக் கூடும்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் மன்னார் புதைகுழியின் உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், இலங்கை அரசுக்குத்தான் அது ஆபத்தாக முடியும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். குற்றமிழைத் தவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும், சர்வதேசத்தில் நல்ல பெயரை எடுக்கவேண்டும் என்ற நல்ல நோக்கங்கள் உண்மையாகவே இலங்கை அரசுக்கு இருக்குமானால் இதனை அரசு உடனடியாகச் செய்யவேண்டும்" - என்றனர். (ங-சி)

### இராணுவத்தில்

வவுனியா சுந்தரபுரப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் இந்த வீடு எரி யூட்டப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். அண்மையில் இந்த வீட்டில் வசித்து வந்த யுவதியொருவர் இராணுவத்தில் இணைந்துள்ளார். அவரின் தாயும் சகோதரர்களும் குறித்த வீட்டில் வசித்து வந்த நிலையில் அது தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

எனினும் சம்பவம் இடம்பெற்ற வேளை எவரும் வீட்டில் இருக்கவில்லை. இதனைப் பயன்படுத்தி வீட்டிற்குள் நுழைந்த நபர்கள் வீட்டுத்தளபாடங்கள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்கள். ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களையும் வீட்டுக்குள் குவித்து விட்டு தீயிட்டுள்ளனர்.

இதனால் அந்தப் பொருள்களும் வீட்டின் பெரும்பகுதியும் எரிந்து நாசமாகின.

தற்போது வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டின் குறித்த வீட்டில் இருந்தவர்கள் தங்குவதற்கு தற்காலிக கொட்டகை ஒன்று அமைத் துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன்இராணுவத்தினரால் சமைத்த உணவும் வழங்கப்பட்டு வரு கிறது.

இதேவேளை இச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் நால்வரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். (ங)

### உண்ணிக்காய்ச்சல்

வரை அனைவரையும் தொற்றிக் கொள்ளும் தன்மையுடைய இந்த உண்ணிக் காய்ச்சல் கடந்த மாதத்திலிருந்தே ஏராளமானோருக்கு தொற்றி வருவது இனங்காணப்பட்டுள்ளது.

கால்நடைகள், செல்லப் பிராணிகள் மூலமாகவே இந்த உண்ணிக்காய்ச்சல் தொற்று ஏற்படுகின்றது. இத்தகைய பிராணிகளுடன் தொடர்புடைய இடங்களில் நடமாடுதல் உட்பட பல்வேறு வகைகளில் இந்த நோய் தொற்று ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே பொது மக்கள் இது குறித்து அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தவிர கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அதிகரித்திருந்த வயிற்றுளைவு நோய் தற்போது குறைவடைந்துள்ளது. மழை காலம் ஆரம்பித்ததையடுத்து இவ்வாறான நோய்களின் பரம்பல் அதிகரித்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ங-4)

### ஈழ அகதி

பணிக்கு சென்ற போது அப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்றிருந்த ஒருவரை விசாரணை செய்தனர். பின்பு அவரிடம் இருந்த பையை சோதனை செய்தபோது 860 அமெரிக்க டொலரையும் 18 ஆயிரம் இந்திய ரூபாவும் வைத்திருந்ததை கண்டு பிடித்தனர். பொலிஸார் பணத்தை கைப்பற்றி அவரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணையில்,இவர்இலங்கை சிலாபம், ஆண்டிமுனை உடப்பூர் பகுதியைச் சேர்ந்த நாச்சிமுத்து அருந்தவ நாதன் (வயது - 42) என்றும் அவர் 2011 இல் விமானம் மூலம் இந்தியாவுக்கு வந்து சென்னையில் தங்கியுள்ளார் என்றும் விசாகாலம் முடிந்தும் இலங்கைக்கு திரும்பி செல்ல விருப்பம் இல்லாததால் தலைமறைவாக திரிந்துள்ளார் என்றும் தெரிய வந்தது.

இவருடைய மனைவி புஷ்பராணி மற்றும் இரண்டு மகள்கள் உட்பட மூவரும் தர்மபுரி அகதி முகாமில் தங்கியுள்ளனர். (ங-சி)

### கடத்தப்பட்டதாக

தமிழமுதன் என்ற இளைஞர் இனந்தெரியோதோரால் கடத்தப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

"என்னை 4 பேர் கொண்ட கும்பல் ஒன்று கடத்திச் செல்கிறது" என்று தனது மகன் கடைசியாக அனுப்பிய குறுஞ்செய்தியில் தெரிவித்திருந்ததாக அவருடைய தந்தை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே முல்லைத்தீவில் குறித்த இளைஞர் தனது நண்பரின் வீட்டில் தங்கியிருந்து விட்டு நேற்றுமுன்தினம் 5.30 மணியளவில் முள்ளியவளைப் பொலிஸில் சரணடைந்துள்ளார். பின்னர் அவர் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த இளைஞர் தனியார் பஸ் மூலம் முல்லைத்தீவுக்கு சென்றுவிட்டு தன்னை சிலர் கடத்தியதாக நாடகம் ஆடினார் என்றும், அரசுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாலும், தான் கடத்தப்பட்டுவிட்டதாக பொய்யான தகவலை பரப்பிய குற்றத்துக்காகவும் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ங-4)

### நவிப்பிள்ளையின்

மான முன்னேற்றம் காணப்படாவிட்டால் அனைத்துலக விசாரணையை வலியுறுத்துவதே ஒரே வழி என்றும் தெரிவித்திருந்தார். எனவே ஜெனிவாவில் அவர் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை இலங்கை அரசுக்கு எதிர்மறை யான கருத்துக்களைக் கொண்டதாகவே இருக்கும் என ஊகிக்கப்படுகிறது. (ங-சி)

# மீண்டும் ஆஸி. அசத்தல்



கொழும்பு, டிசெ. 30
இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியிலும் ஆஸ்திரேலியஅணியேவெற்றி யீட்டியுள்ளது.

இங்கிலாந்து ஆஸ்திரேலியா மோதும் ஆஷஸ் தொடரின் 4 ஆவது டெஸ்ட் போட்டி கடந்த 26ம் திகதி மெல்போர்னில் ஆரம்பமானது. இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 255 ஓட்டங்களையும் ஆஸ்திரேலியா 204 ஓட்டங்களையும் எடுத்தன.

இதன்படி 51 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2 ஆவது இன்னிங்ஸை விளையாடிய இங்கி லாந்து அணி ஆஸி. யின் அபாரமான பந்து வீச்சில் திணறியது.

முடிவில் இங்கிலாந்து 179 ஓட்டங்களுக்கு சகலஇலக்குகளையும் பறிகொடுத்தது. அதிக பட்சமாக பீற்றர்சன் 49 ஓட்டங்களை எடுத்தார்.

ஆஸ்திரேலியா அணிக்கு 231 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 3 ஆம் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் ஆஸி. இலக்கு இழப்பின்றி 30 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

நேற்று 4ஆம் நாள் ஆட்டம் நடந்தது. தொடக்க வீரர் வோர்னர் 25 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார்.

அதன்பின் ரோஜர்ஸ் - வொட்சன் ஜோடி சிறப்பாக விளையாடியது. இருவரும் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களை திணறடித்து ஓட்டங்களைக் குவித்தனர்.

ரோஜர்ஸ் சதம் அடித்தார். இது அவருக்கு 2 ஆவது சதமாகும். அவர் 116 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

2ஆவது இலக்குக்கு ரோஜர்ஸ்- வொட்சன் ஜோடி 136 ஓட்டங்களை எடுத்தது. ஆஸி. அணி 51.5 பரிமாற்றங்களிலேயே 2 இலக்குகளை மட்டும் இழந்து 231 ஓட்டங்களை பெற்று இலக்கை எட்டியது.

இதன் மூலம் 8 இலக்குகள் வித்தியாசத்தில் நாலாவது போட்டியிலும் அபார வெற்றி பெற்றது ஆஸி. அணி. அந்த அணி சார்பில் வொட்சன் 83 ஓட்டங்களுடனும், கிளார்க் 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஆஷஸ் தொடரின் முதல் 3 டெஸ்ட் போட்டிகளிலும் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிவிட்டது. தற்போது 4 ஆவது டெஸ்டிலும் வாகை சூடியுள்ளது.

இங்கிலாந்து தொடர்ச்சியாக 4ஆவது தோல்வியை சந்தித்து ஏமாற்றம் அடைந்தது. ஆஷஸ் தொடரின் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ளது. (ஙு - 400)

அதிரடி மங்களாவின் மலிவு விற்பனை
31/12/2013 வரைக்கும்
சகல விதமான
தளபாடங்களுக்கும் 10% - 50%
விற்பனைக்கழிவு
தெரிவுக்கு முந்துங்கள்
mangala Show Room
10% - 50% விலைக்கழிவு
இல. 536, கே.கே.எஸ் வீதி, மனோகராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர்,பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர்,யுவதிகள், தொழில்புரிவோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 04.01.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. காலை 11.30-01.00
2. காலை 10.00-12.00 4. மாலை இடமில்லை
எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

பதிவு இலவசம்
HONDA
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
இன்றும் நாளையும் மட்டும்
HONDA WORLD
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
021 226 4416, 077 0387444

Diploma in Mobile Phone Repairing
சகல வகையான கைத்தொலைபேசிகளையும்
நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி
முல்லைத்தீவு, நெல்லியடி, மானிப்பாய்
ஆகிய இடங்களில் புதிய பிரிவுகள்
ஆரம்பமாக உள்ளதால் இக் கற்கைநெறியில்
இணைய விரும்பும் மாணவர்கள் உடன்
தொடர்புகொள்ளவும். முடிவில் அரச சான்றிதழ்
வழங்கப்படும். (காலம் - 2 மாதங்கள்)
இன்றுவரை என்னிடம் 2000 மேற்பட்ட மாணவர்கள்
கற்றுவெளியேறி உள்ளதுடன் உரிய தொழில்
வாய்ப்பையும் பெற்றுள்ளனர். பிரிவு 01ஆரம்பமாகி
20 மாணவர்கள் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.
மேலதிகவிபரங்களுக்கு :- 0777 110 862
Https://www.facebook.com/selvajaffnamobile.repairthas

## மரண அறிவித்தல்

### திருமதி பகவதி கணபதிப்பிள்ளை



மகாதனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பகவதி கணபதிப் பிள்ளை நேற்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்புமனைவியும் மரகதவல்லி (இளைப்பாறிய ஆசிரியர்யா/ மகாஜனக்கல்லூரி), கமலவல்லி, சிவலோகநாதர் (இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் mpcs சுன்னாகம்) ஆகியோரின் அன்புத்தாயும் சர்வானந்தராசா, வைத்தீஸ்வரன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் பாமினி யோகநாதன், தாரினி கேதீஸ்வரன், நிலானி ஜெயந்தன், மிதிளா கிரிதர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இதிகாசன், யாசுகன், யெனுத்திகா, அபிநயன், ரிதுஷன், டருண், கிவொன், காருண்னியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2013) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாதனை,
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

தகவல்:
க. சிவலோகநாதன் (வவா - மகன்)

கல்விஆண்டு 2014
விண்ணப்பம் கோரல்
சான்றிதல் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர்களுக்கான தொழில்சார் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரல்
(ACCA) ASSOCIATION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS -U.K (சான்றிதல் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சம்மேளனம்)இன் கற்கை நெறியை யாழ்நகரில் K-AIMS கல்வி நிறுவனத்தினூடாக கற்கை நெறியை மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது
ACCA கற்கை நெறியானது மூன்று நிலைகளை கொண்டது.
1. DIPLOMA - 6 மாதம்
2. DEGREE - ஒருவருடம்
3. ACCA - ஒருவருடம்.
- O/L, A/L பரீட்சைக்கு தோற்றியமாணவர்கள் DIPLOMA நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்
- HNDA, AAT, யாழ் பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்தமாணவர்கள் DEGREE நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 04 January 2014
மேலதிக தகவல்களுக்கும் விசாரணைகளுக்கும்
0773 722 104/ 212 219 422
Colombo
No 35-1/1, Upatissa Road
Bambalapitiya
JAFFNA
No 147-2/2 K.K.S Road
Jaffna

← பொருளியற் →
கல்லூரி
நாவலர் றோட் யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் றோட் இணுவில்.
(இரு இடத்திலும்)
A/L 2016
→ கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் ←
ஆரம்பம்: 05.01.2014 காலை 8.00 மணி
Note : BARATHY சித்தன்கேணியிலும் இதே திகதியில் ஆரம்பமாகின்றது.
✱ உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.


CIMA கற்க விருப்பம்!செலவு மிக அதிகமாம்!
கவலையை விடுங்கள் MCS,CIMA UK இணைந்து வழங்கும்
Scholarship Totally free for CIMA-CBA 34000 Rs
CIMA-UK schol Totally free for Reg 16800 Rs.
offer valid untill 31st Dec 12.00 noon.
Type CIMAFREE<NAME> & send to 772395895
அடிப்படைத்தகைமைகள் எதுவுமில்லை. எத்துறை சார்ந்தோரும் பயிலலாம்.
மாணவர்களின் உயந்த பெறுபேறுகள்.தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள்.
உங்கள் தெரிவிற்கேற்ப விரிவுரை நேரங்கள். மேலதிக விபரங்களிற்கு
MCS யாழ்பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்

மணல் விற்பனைக்கு
கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலை களுக்கும்
சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.
4½ ரக்ரர் 19,000/=
தொடர்பு: கண்ணா
(40472)(4.6.3) 077 676 6499, 077 759 0792

Mega Sale மங்களா மலிவு விற்பனை
சகல தளபாடங்களுக்கும் விசேட விலை குறைப்பு
30.12.2013 ஏல விற்பனை
கையிருப்பு உள்ளவரை மட்டுமே முந்துங்கள்
10% → 50%
536, K.K.S. Road, மனோகராச்சந்தி யாழ்.


கபிலா
பாதணியகம்
13, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
பாடசாலை மாணவர்களுக்கான
Bata DSI பாதணிகளைப்
பெற்றுக்கொள்ள
பொறுத்த விலையைவிடக் குறைவான விலையில்.... அசத்தலான தள்ளுபடி
கபிலா
காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.